MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - 1st Week of Every Month.

நமது இல்லத்து இறைவனாக இருக்கும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய மறந்தவர்களுக்கும், செய்ய தவறியவர்களுக்கும் பித்ரு பூஜை, கோதானம் செய்ய ஏற்ற நாள் மஹாளயபக்ஷ அமாவாசையே. இத்திருநாளில், முன்னோரை வழிபட்டு முன்னேற்றமடைவோம்

# மஹாளய அமாவாசை-30.09.2016

## ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில்

கோதானம் மற்றும் மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் திலஹோமம், திலதர்ப்பணம் மற்றும் பித்ரு தோஷ நிவர்த்திக்கான கோபூஜை மற்றும் வலம்புரி சங்கு பூஜையில் கலந்து கொண்டு அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்


கடந்த வருடம் ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் பசுமடத்தில் நடைபெற்ற கோதானம்

முன்னோர்களின் ஆசி வேண்டியும், அனைத்து தோஷங்களில் இருந்து விடுபடவும் அற்புதங்கள் நிறைந்த மஹாளய அமாவாசை தினத்தன்று, சென்னை திருவேற்காட்டில் உள்ள பசுமடத்தில் கோதானம் நடைபெற உள்ளது. பசு தானம் யார் நினைவாக செய்யப்படுகிறதோ, அவர்கள் பசுவின் ஒவ்வொரு ரோமத்திற்கும் ஒரு ஆண்டு வீதம், பல ஆயிரம் ஆண்டுகள் கோ-லோகத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானுடன் சேர்ந்திருக்கும் பேறு பெறுகிறார்கள். மேலும், தாங்கள் ஜென்ம லாபங்கள் பெறவும் குடும்பம் வாழையடி வாழையாக செல்வச் செழிப்புடன் திகழவும் தீர்க்காயுள் பெறவும் கோதானம் செய்வீர். யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும், ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் ராசியானவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** தமது வேத வித்வான்கள் குழுவுடன் கோதான பூஜை மற்றும் வலம்புரி சங்கு பூஜை செய்ய உள்ளார். இதில் கலந்துகொண்டு யாருக்காக செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுடைய முழு விவரங்களையும் தெளிவாக குறிப்பிட்டு, கணக்கிலடங்காத தெய்வீக பலன்களை பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.


பசுமடத்தில் நடைபெறும் திலதர்ப்பணம்

நமக்கு நல்வாழ்வு அளித்துச் சென்ற பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வது நமது இன்றியமையாத கடமையாகும். பித்ருக்களை திதி நாளில், திருப்திபடுத்தாத காரணத்தினால் தான் நமக்கு தொடர்ந்து துன்பங்கள் வருகின்றன. மஹாளயபக்ஷ காலங்களில் பூலோகத்திற்கு தங்கள் சந்ததிகளை பார்க்க வரும் பித்ருக்கள், நாம் செய்யும் பித்ரு ஆராதனையால் மட்டுமே திருப்தி அடைகின்றனர். ஆதலால் பித்ருக்களை சாந்தப்படுத்த திலஹோமம், திலதர்ப்பணம் செய்வது அவசியம். எனவே, நமது வாழ்வை உயர்த்தும் மஹாளயபக்ஷ அமாவாசை அன்று பித்ரு பூஜை ஒவ்வொரு குடும்பத்திலும் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, **திருவேற்காட்டில் உள்ள பசுமடத்தில் கடந்த 17 ஆண்டுகளாக** வைதீக முறைப்படி திலஹோமம் செய்து, மாட்டுத் தொழுவத்தில் பசுமாட்டினை முன்நிறுத்தி, ஸ்ரீசாளகிராமம் ஸ்ரீவிஷ்ணு பாதம் முன் புனிதமான கங்கை நீர் கொண்டு திலதர்ப்பணம் மற்றும் பித்ருதோஷ நிவர்த்திக்கான கோபூஜை செய்து வருகிறோம். இதில் கலந்து கொண்டு அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற்று பிதுர் ஆசி, ரிசி ஆசி, குரு ஆசி, தேவ ஆசி, நோயற்ற சந்ததி, செல்வம், வம்சவிருத்தி, ஆரோக்யம் மற்றும் ஞானம் பெறவும் அன்புடன் அழைக்கிறோம்.

வயது முதிர்ந்த பசுக்களை பசுமடத்தில் பராமரிக்க தங்களால் முடிந்த கீழ்க்காணும் நன்கொடையை அனுப்புகிறவர்கள், யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், நட்சத்திரம், திதி போன்ற விவரங்களை தெரிவிக்கவும். அதன்படி திலஹோமம், திலதர்ப்பணம், கோபூஜை செய்யப்படும். மேலும் தங்களின் முன்னோர்கள் நினைவாக பசுமடத்தில் உள்ள **வயதான பசுக்களுக்கு அகத்தி கீரை, கோரை புல், கருப்பு எள் உருண்டை, வெல்லம், வெண்பொங்கல், பழங்கள், பருத்தி கொட்டை, புண்ணாக்கு** போன்றவைகளை உணவளித்து, அதன்பின் **வஸ்திரதானம்** மற்றும் **அன்னதானம்** நடைபெறும்.

ரூ 200 - அனுப்பும் அன்பர்களுக்கு கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்
ரூ 500 - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான பெருமாள் விளக்கு அனுப்பி வைக்கப்படும்
ரூ 1,000 - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ 1,500 - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான காசி ஸ்ரீ அன்னபூரணி விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ 2,000 - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான லட்டு கிருஷ்ணர் விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ 2,500 - அனுப்பும் அன்பர்களுக்கு பசுவும் கன்றும் சேர்ந்த வெள்ளியிலான விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ 3,300 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்
ரூ 4,200 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்
ரூ 6,600 - அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்


பசுமடத்தில் நடைபெறும் திலஹோமம்

நாட்டுப் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், தலைமுறை தோஷம், செய்வினை தோஷம், மாத்ரு, பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், புத்ர தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், செல்வக்குறைபாடு/சொத்துக்குறைபாடு தோஷம், பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகி, தீர்க்க சுமங்கலி பாக்கியம், கணவன்-மனைவி ஒற்றுமை, தடைப்பட்ட திருமணம் கைகூடல், மறுமணம், குடும்பத்தில் குபேர சம்பத்து உண்டாகி மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். **கோதானம் செய்ய ரூ-12,500/-**

காறாம் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஏழரை சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி விலகும். நவக்கிரஹ தோஷம், ருண ரோக தோஷம், நாக தோஷம், ராகு-கேது, சந்திர தோஷம், அபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை, பணம் மற்றும் தேவையற்ற பிரச்சனைகள் விலகி, கிரஹங்களின் பாதிப்பு விலகி, வீடு, நிலம், பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் பெற்று சந்தான அபிவிருத்தியுடன் மகாலட்சுமி அருள் உண்டாகும். **காறாம் பசு தானம் செய்ய ரூ.13,000/-**

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால்... ஆயுள் தோஷம், நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் மன உளைச்சல், வியாபார நஷ்டம், கடன் பிரச்சனை, படிப்பில் தடை, உத்யோகத் தடை நீங்கும், கால ஸர்ப்ப தோஷம், சத்ரு தோஷம், பாப தோஷம் விலகி, வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, குலவிருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, குடும்ப விருத்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை, மனசாந்தி, ஆத்ம ஞானம் உண்டாகும். **மகிஷ தானம் செய்ய ரூ-14,000/-**

கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான பெருமாள் விளக்கும், பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், வெள்ளியிலான காசி ஸ்ரீ அன்னபூரணி விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்



**குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கித் தருவதும் வலம்புரி சங்கே!**

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மாணவர்கள் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு வரும் நோய்களை தடுக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், ரியல் எஸ்டேட், வியாபாரத்தில் யோகம் பெறவும், கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் தீரவும், குடிப்பழக்கம், தீயசக்தியை தடுக்கவும், தொட்டது துலங்கவும், மனக்கவலை மாற்றும் வலம்புரி சங்கை வழிபடுவீர். முன்னோர்கள் நினைவாக **ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து வளர்க்க ரூ. 6,600/-** அனுப்புவோருக்கு **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யாவால்** மஹாளய அமாவாசை அன்று பசுவிற்கு அபிஷேகம் செய்ய பயன்படுத்தப்பட்ட செல்வ வளம் செழிக்க செய்யும் வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் தங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும், சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில், மாத சிவராத்திரியன்று சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும், மேலும் தங்கள் சார்பாக தர்ப்பணம் செய்யப்பட்ட ஸ்ரீவிஷ்ணு பாதமும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு அனுப்பி வைக்கப்படும்.



தங்கள் நன்கொடையை CHEQUE/D.D/M.O ஆக SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

17 ஆண்டுகளாக கோ ஸம்ரக்ஷண சேவையில்...

# பசுமடம்

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77. Off: 8754 555 555, Madam: 8754 666 666 www.shrigosala.com



விண்ணில் இருக்கும் முன்னோரே... மண்ணில் வந்து நிற்கும் நீவிர்... என்னால் இடப்படும் எள்ளும் நீரும் சேர்ந்திட வேணும்... நன்றாய் வாழ வாழ்த்துவீரே - நல்லருள் பெற வேண்டுகிறோம்!

# மித்ரா டைம்ஸ்

## MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

| ஆண்டு-2 | இதழ்-4 | செப்டம்பர்-2016 | விலை ரூ.20/- | ஆண்டு சந்தா ரூ.240/- |
|---|---|---|---|---|
| Volume-2 | Issue-4 | September-2016 | Price Rs.20/- | Annual Subscription Rs.240/- |




## சுதந்திர தின கொண்டாட்டம்: ஒரு நாள் போதுமா?




## ஒலிம்பிக்: சாதிக்கத் துடிக்கும் பெண்களின் முன்னோடிகள்



## செவாலியே விருது பெற்ற நாயகன்!

## ஆசிரியர் கடிதம்

# சுதந்திர தின கொண்டாட்டம்: ஒரு நாள் போதுமா?



என் எண்ணம்
- எம்.எஸ்.மூர்த்தி

70-வது சுதந்திர தின விழா இந்தியா முழுவதும் கடந்த மாதம் 15-ந் தேதி கோலாகலமாக கொண்டாடப்பட்டது. டெல்லி செங்கோட்டையில் பாரதப்பிரதமர் மோடியும் தமிழகத்தில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் ஜெயலலிதாவும், தேசியக்கொடியை எற்றி வைத்து நாட்டு மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துச் செய்தியை அளித்திருக்கிறார்கள். மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் அதிகாரிகள், பள்ளிகூடங்களில் மாணவ, மாணவியர் இந்த கொண்டாட்டத்தை மகிழ்ச்சியோடு முடித்திருக்கிறார்கள்.

இது ஒருநாள் மட்டும் கொண்டாடப்படும் கொண்டாட்டமா? இல்லை. வாழ்நாள் முழுவதும் கொண்டாடப்பட வேண்டிய கொண்டாட்டம்! ஏனெனில் சும்மா வந்துவிடவில்லை சுதந்திரம்.

வர்த்தக ரீதியாக இந்தியாவை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைகளாக்கி ஆட்சி செய்தனர். இதை எதிர்த்து அகிம்சை முறையில் மகாத்மா காந்தி தலைமையில் பாரத தேசத்தின் விடுதலைக்காக எண்ணற்ற தலைவர்கள் போராடினர். பல உயிர்களை தியாகம் செய்தும், ரத்தம் சிந்தியும் பெறப்பட்டதுதான் சுதந்திரம்.

இன்றைய சுதந்திர இந்தியாவில் பேச்சுரிமை, எழுத்துரிமை இருக்கிறது. ஆனால் நாட்டை அச்சுறுத்தும் சவால்கள் இல்லாமல் இல்லை. தேசிய அளவில் எல்லை ஆக்கிரமிப்பு, தீவிரவாதம் வறுமை ஆகிய பிரச்சனைகளும் அந்நிய நாடுகளான பாகிஸ்தான், சீனா அவ்வப்போது நம்மை அச்சுறுத்தும் மிகப்பெரிய பிரச்சனை. தமிழகத்தின் அண்டை மாநிலங்களான காவிரிப் பிரச்சனையில்கர்நாடகத்துடனும், முல்லைப் பெரியாறு பிரச்சனையில் கேரளாவுடனும் பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதில் ஆந்திராவுடனும் மோதல் போக்கு இருந்து வருகிறது.

ஆங்கிலேயர்கள் இந்த மண்ணைவிட்டு வெளியேறினாலும் அவர்கள் விட்டுச்சென்ற கலாச்சாரத்தின் அடித்தளம் மாறவில்லை என்பது தான் வேதனை. அமெரிக்காவில் 15 வயதுக்கு பிறகு எந்தவொரு இளைஞனும்,



பெண்ணும் பெற்றோர்களுடன் சேர்ந்து வாழ்வது இல்லை. சுதந்திரம் என்ற பெயரில் சுற்றித் திரிகிறார்கள். இந்தியாவின்

பெருமையே கூட்டுக் குடும்பம்தான். அது இன்றைக்கு சிதறிக் கிடக்கிறது.

கூட்டுக்குடும்பத்தில் இருந்தபோது குடும்பத்தினருக்குள் உறவுகள் பலபட்டிருந்தது. குழந்தைகளுக்கு தாத்தா, பாட்டி, சித்தப்பா, பெரியம்மா, சித்தி அத்தை, மாமா, மாமி என உறவுகளின் பாச சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்ததில் சுகம் இருந்தது. அன்றைக்கு குடும்பத்தலைவர் சம்பாதித்து வருவார். ஒருவர் சம்பாத்தியத்தில் குடும்பமே மகிழ்ச்சியுடன் உண்டும் உறங்கியும் வாழ்ந்தனர்.

இன்றைக்கு தனிக்குடித்தனத்தில் கணவன், மனைவி இருவருமே வேலைக்கு செல்கின்றனர். ஆனால் குழந்தைகள் கவனிக்கப்படுவதில்லை. அவை ஆயாக்கள் எனப்படும் காப்பகங்களில் பணிபுரியும் பணிப்பெண்களின் அரவணைப்பில் வளர்கிறது. இதனால் பாசம், உறவு அந்தக் குழந்தைக்கு எட்டாக்கனியாகிறது. எனவே வளர்ந்த பிறகு பக்குவம் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏனெனில் ஐந்தில் வளையாத காரணத்தால் ஐம்பதில் வளைய வாய்ப்பில்லை.

முதலில் தனிமனிதனின் வாழ்க்கை முறை சீரடைந்தால்தான் குடும்பம் சீராகும். குடும்பத்திலிருந்து தொடங்கப்படும் சிறப்பு தேசத்திற்கு பெருமையை சேர்க்கும். எனவே நாம் பெற்ற சுதந்திரத்தை உண்மையில் அனுபவிக்க வேண்டுமென்றால் அந்த சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த தியாகிகளை மறக்கக்கூடாது. பெற்றவர்களையும், கற்றவர்களையும் மதிக்க வேண்டும். பாரதத்தின் தனிச்சிறப்பே பண்பாடுதான். அந்த பண்பாடு சிதையும்போது தேசத்தின் பெருமை சிதறுண்டு போகும்.

அந்நிய கலாச்சாரப் படையெடுப்பு நம்மை மீண்டும் அடிமைப்படுத்தி ஆளும் வாய்ப்பைத் தராமல் பாதுகாப்போம். அந்த நினைவோடு நித்தம் நித்தம் சுதந்திரத்தைக் கொண்டாடுவோம்...!

---

வாழ்க பாரதம்...


# மித்ரா டைம்ஸ்

மாத இதழ்

ஆண்டு 2 செப்டம்பர் 2016 இதழ் 4

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்

**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

தலைமை செய்தியாசிரியர்
K. **பாலகிருஷ்ணன்**

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**
M.G. **சேகர்**

நிர்வாக மேலாளர்
(விற்பனை, விளம்பரம், சந்தா)
V. **மோகன்ராஜ்**
9710362234

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
**கோவை** M.**சாகுல் ஹமீது**
**திண்டுக்கல் முபாரக்**
**சேலம் பிரவீன்குமார்**
**திருப்பூர்** R. **அருண்**



அலுவலக முகவரி
602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,23743007/8
**Whatsapp No. 9841843773**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**




# நுழைவு வாயில்


| | |
|---|---|
| சாதிக்கத் துடிக்கும் பெண்களின் முன்னோடிகள் | 6 |
| மொழியின் வரலாறு | 8 |
| ஆங்கிலேயரை மிரள வைத்த மலைவாழ் மக்கள் | 10 |
| இராசிப்பலன்கள் | 12 |
| ஒவ்வொரு ஆலயம்-ஒவ்வொரு சிறப்புகள் | 14 |
| விளம்பரம் பார்த்து மனை வாங்கப் போறீங்களா | 16 |
| நீங்களும் நிர்வாகியாகலாம் | 18 |
| நமக்கு நாமே | 20 |
| வெற்றிக்கு வழி | 22 |
| மனித தலைக்கு மதிப்பில்லை | 24 |
| மித்ரா சினி கோலிவுட் | 26 |
| தஞ்சை கபாலி | 28 |
| கல்வியில் சிறந்து விளங்க பாட வேண்டிய பதிகம் | 30 |
| தெரிந்து கொள்வோம் | 33 |
| மருத்துவம்-நஞ்சற்ற உணவே நோயற்ற வாழ்வு | 34 |
| ஓய்வு பெற்றும் நிம்மதி இல்லை | 36 |
| பீனிக்ஸ் பறவை | 38 |
| POWER OF LEARNING | 40 |
| ராம்மோகன் ராவ்-ஐ.ஏ.எஸ். | 42 |
| நம்பிக்கை தானே அழகு | 43 |
| கபாலிகான் நியூஸ் | 44 |
| கட்டுமானத் தொழிலில் நவீன தொழில்நுட்பம் | 46 |
| எம் பதில்கள் | 48 |
| நாம் இருவர் - பாரதியார் பாடல்கள் | 50 |

# ஒலிம்பிக்: சாதிக்கத் துடிக்கும் பெண்களின் முன்னோடிகள்

## சிந்து, மாலிக் சாக்ஷி

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்த சிந்து, சாக்ஷி மாலிக்கிற்கு பரிசுகள் குவிகின்றன. சிந்துவை சொந்தம் கொண்டாடும் ஆந்திரா, தெலுங்கானா அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு கோடிகளை கொட்டுகின்றன. ஒலிம்பிக்கிற்கு சாதாரண வீராங்கனைகளாக சென்ற இவர்கள், தற்போது கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர்.

பிரேசிலின் ரியோவில் 31வது ஒலிம்பிக் போட்டி நடக்கிறது. இதில் பங்கேற்க 118 பேர் கொண்ட இந்திய குழு சென்றது. பெரும்பாலானோரின் முயற்சிகள் தோற்க, முதல் மகிழ்ச்சியை அரியானாவை சேர்ந்த மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் கொண்டு வந்தார். வெண்கலப்பதக்கம் வென்ற இவருக்கு ரூ. 2.5 கோடி பரிசு தரப்படும் என அரியானா அரசு அறிவித்தது. இவர் பணியாற்றும் இந்திய ரயில்வே ரூ. 50 லட்சம், ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றதற்கு ரூ. 10 லட்சம் என மொத்தம் ரூ. 60 லட்சம் பரிசு அறிவித்தது. பதவி உயர்வு வழங்கப்படும் எனவும் உறுதி அளித்தது.






**சிந்து** : ரியோ ஒலிம்பிக் பாட்மின்டன் ஒற்றையர் பிரிவில் வெள்ளி வென்ற இந்திய வீராங்கனை சிந்துவும் பரிசு மழையில் நனைகிறார். ஐதராபாத்தில் பிறந்த இவர், புதிதாக உருவான தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்தவராகிறார். இவருக்கு தெலுங்கானா மாநில அரசு முதலில் ஒரு கோடி பரிசு அறிவித்தது. இந்திய பாட்மின்டன் சங்கம் (பி.ஏ.ஐ.,) ரூ. 50 லட்சம், இந்திய ஒலிம்பிக் சங்கம் (ஐ.ஓ.ஏ.,) ரூ. 30 லட்சம், மத்திய விளையாட்டு அமைச்சகம் ரூ. 30 லட்சம், இந்திய ஒலிம்பிக் சங்கம் ரூ. 20 லட்சம், மும்பையில் உள்ள தனியார் நிறுவனம் ரூ. 15 லட்சம் வாரி வழங்கின. இந்திய கால்பந்து சங்கம் ரூ. 5 லட்சம், மத்தியப்பிரதேச அரசு ரூ. 50 லட்சம் மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனங்களும் பரிசு வழங்க முன்வந்துள்ளன இதற்கிடையே ஒன்றுபட்ட ஆந்திராவாக இருந்த போது பாட்மின்டன் வளர்ச்சிக்கு நிறைய உதவிகள் செய்ததாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறினார். பின் சிந்துவுக்கு ரூ. 3 கோடி, 'குரூப் 1' அதிகாரி பதவி வழங்கப்படும் என அறிவித்தார். இதனை அறிந்த தெலுங்கானா அரசு சிந்துவுக்கான பரிசுத் தொகையை ரூ. 1 கோடியில் இருந்து ரூ. 5 கோடியாக உயர்த்தி அறிவித்தது. சாக்ஷிக்கு ரூ. 1 கோடி வழங்கப்படும் எனவும் தெரிவித்தது.இருவருக்கும் மஹிந்திரா நிறுவனம் நவீன 'ஜீப்' பரிசாக வழங்க உள்ளது. ஐதராபாத் பாட்மின்டன் சங்க தலைவர் சாமுண்டீஸ்வரி, சொகுசு பி.எம்.டபிள்யூ கார் ஒன்று சிந்துவுக்கு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.



டில்லி அரசும் தன் பங்கிற்கு சிந்துவுக்கு ரூ. 2 கோடி, சாக்ஷிக்கு ரூ. 1 கோடி பரிசு வழங்கப்படும் என அறிவித்துள்ளது.


**'உங்கள் பெயர் சிந்துவா... இந்தாங்க பிடிங்க இலவச 'பீட்சா'**, என, சிந்துவின் வெற்றியை வித்தியாசமாக கொண்டாடியது பிரபல 'பீட்சா ஹட்' நிறுவனம். இந்த சலுகை ஒரு நாள் மட்டும் தான். சிந்து என பெயர் வைத்தவர்களுக்கு யோகம் அடித்தது. மல்யுத்த வீராங்கனை சாக்ஷி வெண்கலம் வென்றபோதும், இது போன்ற இலவச சலுகையை இந்நிறுவனம் வழங்கியது.

'விமானத்தில் பறக்க வேண்டும் என்ற ஆசை காரணமாகவே விளையாட்டு வீராங்கனையாக உருவெடுத்ததாக' சாக்ஷி மாலிக் கூறினார். இவரது விருப்பத்தை பூர்த்தி செய்ய 'ஏர் இந்தியா' நிறுவனம் முன் வந்துள்ளது. உலகத்தில் இவர் விரும்பும் இரு இடங்களுக்கு 'பிசினஸ் கிளாசில்' பயணம் செய்ய இலவச டிக்கெட் வழங்கியுள்ளது.

**பொதுவாக விளையாட்டுத்துறையில் சாதிக்கத்துடிக்கும் பெண்கள் நாட்டுக்கும், தங்களின் பெற்றோருக்கும் பெருமை சேர்க்கும் விதமாக இருக்க வேண்டும். தங்களின் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள உடற்பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சியாளரை மதித்து அவர் சொல்வதை கேட்டு நடக்க வேண்டும். தங்களை பெற்றோர்கள் ஊக்குவிக்கும் வகையில் அவர்களை மதித்து நடக்க வேண்டும். பெண்கள் அப்படி நடந்தால் அவர்களுக்கு பெருமைப்படும் விதமாக வெற்றி வந்து சேரும்.**

**- திருமதி. சுஜாதா மூர்த்தி**

# மொழியின் வரலாறு



மனிதன் முதன் முதல் பாறைகளில் தான் எழுதினான். மலைக்குகைகளில் வாழ்ந்த மனிதன், இலை தழைகளின் சாறு கொண்டும் இயற்கையாகக் கிடைத்த வண்ணக் கட்டிகளை கொண்டும் குகைச்சுவரில் ஓவியங்களைத் தீட்டினான். இரும்பைப் பயன்படுத்தப் பழகிக் கொண்டபோது, மலைப்படுகைகளில் உளி கொண்டு எழுத்துக்களைச் செதுக்கினான்.

இறைவன் எழுதியது பாறையில் தான் என்று 'பழைய ஏற்பாடு' கூறுகிறது. மனிதன் பாறைக்குப் பின், எழுதும் ஏடாக எத்தனையோ பொருள்களை பயன்படுத்தினாலும் கல்லில் எழுதியதுதான் காலத்தாலும் அழியாது நிலைத்தது. எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் இன்னும் இருக்கின்றன. அந்த எழுத்துக்களைக் கொண்டுதான் எழுத்தின் வளர்ச்சியை நாம் அறிந்து கொள்கிறோம்.

நிலைத்து நிற்க வேண்டும் என்று விரும்பிய எல்லாவற்றையும் கற்களில் பொறித்தார்கள். கோவில் சுவர் முழுக்க கல்வெட்டுகளே! போரில் உயிர் நீத்தோர் நினைவாக நடப்பட்ட வீரக்கற்களும் கல்வெட்டுகளே! புத்தரின் அறிவுரைகளைப் பரப்ப அசோகர் கல்வெட்டுகளை ஏற்படுத்தினார்.

**எம்.எஸ். மூர்த்தி**

தொடர்-5

இன்றுகூட கட்டிடத் திறப்பு விழாக்களில் கல்வெட்டுகளையே பயன்படுத்துகிறோம். வீட்டு முகப்பில் நமது பெயரைக் கல்லில் பொறித்துப் பதித்துக் கொள்ளுகிறோம்.

கல்வெட்டுகள் காலத்தாலும் அழிவதில்லை என்பதால் தான் "நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போல் காணுமே" என்று அவ்வையார் பாடினார். அதே நேரத்தில் "நல்லவர் அல்லார் ஒருவருக்கு செய்யும் உதவி நீர் மேல் எழுத்துப் போல் ஆகும்" என்றும் கூறுகிறார்.

கல்வெட்டுகளைப் பொறிக்கத் தனிக் கலைஞர்கள் இருந்தார்கள். அவர்களை 'எழுத்தச்சன்' என்றார்கள். ஒரு கல்வெட்டில் "இந்த சாசனம் வெட்டியவன் எழுமாத்தூர் எழுத்தச்சன்" என்று காணப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம் இன்றும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் கிடைக்கின்றன. வரலாற்று ஆவணங்களாக அவற்றை பாதுகாக்க, அரசுகள் தனித்துறை அமைத்து இருக்கின்றன. கல்வெட்டு எழுத்துகள் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன.

இதுவரை தென்னிந்தியாவில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் 33 ஆயிரம் கல்வெட்டுகள் நகல் எடுக்கப்பட்டு உள்ளன. சோழற்கால கல்வெட்டுகள் 10 ஆயிரத்தில் 3500 மட்டுமே படி எடுக்கப்பட்டு இருக்கின்றன.



அன்றைய கல்வெட்டு எழுத்துகளை இன்று படிக்க முடிவதில்லை. எனவே, கல்வெட்டுகளை படிக்க, தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை பயிற்சி வகுப்பு நடத்துகிறது. மதுரையை அடுத்த அழகர் மலை மீனாட்சிபுரம், திருவாதவூர் ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளே தமிழில் இதுவரை கிடைத்துள்ள பழமையான கல்வெட்டுகள். அவற்றின் காலம் கி.மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தது என்று தழ்நாடு அரசு தொல்பொருள் துறை இயக்குநர் இரா. நாகசாமி தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் கடையத்தை அடுத்த கேளாப்பிள்ளையூரில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. அதை 'எழுத்துக்கல் மாடன்' என்று வணங்குகிறார்கள். அது ஒரு நடுகல் அதில் உள்ள எழுத்துகள் படிக்க இயலாத நிலையில் சிதைந்து விட்டன.



கல்வெட்டுக்களைப் போன்றே செப்புப் பட்டயங் களும் அழிவற்று விளங்கு கின்றன. தங்கத் தகட்டில் கூட எழுதினார்கள். இலங்கையில் அனுராதபுரம் என்ற இடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் தங்கத் தகட்டில் எழுதப்பட்ட சுவடி ஒன்று கிடைத்தது. அது 1500 ஆண்டுகள் பழமையானது. மொத்தம் 14 பக்கம். பாலி மொழியில் புத்தரின் அறிவுரைகள் எழுதப் பட்டு உள்ளன. எழுதும் ஏடாக ஆமை ஓடு பயன்பட்டு இருக்கிறது. எலும்புகள் மீது எழுதியிருக்கிறார்கள். சிப்பிகள், சங்குகள் மீதும் எழுதினார்கள். கொம்பு, ஆடு மாடுகளின் தோல், துணி, மரப்பட்டை முதலியவற்றையும் எழுதப் பயன்படுத்தினார்கள்.

இசுலாமிய சட்டமேதை இசாம் சாபீ, "ஈச்ச ஓலைகளிலும் ஆடுகளின் அகன்ற எலும்புகளிலும், ஒட்டகத்தின் தோலிலும் தோள் எலும்புகளிலும், உடைந்த ஓடுகளிலும் நான் எழுதிப் படித்தேன் " என்று கூறியுள்ளார்.

களி மண்ணை சமப்படுத்தி அதன் மீதும் எழுதினார்கள். ரோமர்கள் மரப்பலகை மீது மெழுகை உருக்கிவார்த்து, அதன் மீது எலும்பு கொண்டு எழுதினார்கள். களிமண் எழுத்துகள் (தமிழ் எழுத்துகள்) சிந்து வெளியில் கிடைத்தன. அதற்கும் முந்தியதாகக் கருதப்படும் நெல்லை மாவட்டம் ஆதித்த நல்லூரில் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

2700 ஆண்டுகளுக்கு முன் சிரிய நாட்டின் வரலாறு எழுதப்பட்ட செங்கற்கள், சில ஆண்டுகளுக்கு முன் தோண்டி எடுக்கப்பட்டன. ஒவ்வொரு செங்கல்லும் 5 அங்கலம் நீளம். ஒவ்வொன்றிலும் 5 வரிகள் எழுதப்பட்டு உள்ளன. வரிக்கு 10 சொற்கள். இச்செங்கல் தொகுப்பை "உலகின் முதல் நூல்" என்று சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இப்படி எழுதும் ஏடாக எத்தனையோ பொருள்கள் பயன்பட்டாலும், மரமும் செடி கொடிகளும்தான் பெருமளவில் பயன்பட்டன.

தொடரும் ...

HA HA HA

## ஜோக்ஸ்

நண்பர் 1 : மாப்பிள்ளை மருத்துவத் துறையில் 10 வருஷமா இருக்கறதா சொல்லி ஏமாத்திட்டாரு.

நண்பர் 2 : எப்புடி?

நண்பர் 1 : அவரு 10 வருஷமா பேஷண்ட்டா இருக்காறாம்!

நண்பர் 2 : ????

# ஆங்கிலேயரை மிரள வைத்த மலைவாழ் மக்கள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இந்தியத் தலைவர்கள், புரட்சி வீரர்கள், தேசபக்தர்கள், சிப்பாய்கள், பொதுமக்கள் என பலதரப்பட்ட பிரிவினர் கலந்து கொண்டனர் என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஆனால் இந்தப் போராட்டத்தில் இந்திய மலைவாழ் பழங்குடியினரும் கலந்து கொண்டனர் என்பது அதிகம் அறியப்படாத செய்தி. சுதந்திரப் போராட்ட வரலாற்றிலும் இந்த செய்தி பெருமளவில் மறைக்கப்பட்டுவிட்டது. போராட்டம் நடந்த பகுதிகளில் வசித்தவர்களைத் தவிர இந்தியாவின் மற்ற பகுதிகளில் வாழ்ந்தவர்களுக்கு இந்த விஷயம் தெரியவே தெரியாது.

பிரிட்டிஷாரின் நிர்வாகத்துக்குக் கீழே பணிபுரிந்தவர்களின் ஊழல், பணத்தாசை, ஜமீன்தாரி முறை ஆகியவை மலைப்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியினருக்கும் நகர்ப்புறங்களில் வசித்த பிரிட்டிஷாருக்கும் இடையே மோதல் ஏற்பட முக்கிய காரணங்களாக அமைந்தன. இன்றைய பீகார்,ஜார்க்கண்ட், ஒடிசா, மேற்கு வங்காளம் ஆகியவற்றின் பகுதிகள் அன்றைய வங்காள மாகாணத்தின் பகுதிகளாக இருந்தன. மிட்னா பூர், ஹசாரிபாக், மன்பும், பிர்பும், தால்பும், பாலமாயு, பாராபும், கட்டாக், சோட்டா நாக்பூர், பாங்குரா ஆகிய பகுதிகளில் வசித்த பழங்குடியினர் பிரிட்டிஷாரின் வருகைக்கு முன்பு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தனர். வேட்டையாடுவது, மரம் வெட்டுவது ஆகிய தொழில்களைச் செய்து மிகவும் அமைதியுடன் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

1800-களில் அந்த மலைவாழ் மக்களையும் விட்டு வைக்கவில்லை பிரிட்டிஷார். அவர்கள் மலைப்பகுதிகளும் தங்களுக்கு உரியது என்று சொந்தம் கொண்டாடினர். மேலும் தங்களுக்கு வருமானம் கிடைக்கும் என்பதால் மலைப் பிரதேசங்களுக்கு அருகில் வசித்த நிலக்கிழார்களும், ஜமீன்தார்களும் பிரிட்டிஷாருக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்கள் பழங்குடியினரின் வாழ்க்கையில் பெரும் நெருக்கடிகளைக் கொடுத்தனர். பழங்குடியினருக்கு, வட்டிக்குக் கடன் கொடுத்து அவர்களை தீராத கடனாளிகளாக்கினர். இருக்கின்ற பொருட்களை விற்கும் அளவிற்கு அவர்களை ஏழைகளாக்கினர். பல பழங்குடி-யினர் தாங்கள் பட்ட கடன்களைத் தீர்க்க ஜமீன்தார்களிடமும் நிலக்கிழார்களிடமும் அடிமைகளாக வேலை பார்த்தனர். உழைப்பாலும் அவர்கள் ஏமாற்றப்பட்டனர். பணம் கொடுக்கல் வாங்கலில் மோசடி செய்யப்பட்டனர்.



மலைப் பகுதிகளில் அமைதியாகவும், நேர்மையாகவும் வாழ்ந்து கொண்டிருந்த அவர்கள் பிரிட்டிஷாரின் வருகையால் சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் இழந்தனர். இந்த கொடுமையை நாளடைவில் பொறுத்துக் கொள்ள முடியாத அவர்கள் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராட முடிவு செய்தனர்.

வலிமை வாய்ந்த பீரங்கி துப்பாக்கிகளை எதிர்த்துப் போராட பழங்குடியினரிடம் அம்பு, ஈட்டி ஆகிய ஆயுதங்கள் மட்டுமே இருந்தன. ஆனாலும் அவர்கள் மனதில் எழுந்த வெறி பிரிட்டிஷாரை எதிர்த்து அவர்களைப் போராடத் தூண்டியது. மனஉறுதியுடன் அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டனர். ஜுன் 30, 1855 அன்று சிடோ மர்மு (Sido Murmu) மற்றும் கான்ஹு மர்மு (Kanhu Murmu) ஆகிய இரு பழங்குடி இனத்தலைவர்கள் போர் செய்தனர்.

வில் வித்தையிலும் ஈட்டி எறிதலிலும் கைதேர்ந்திருந்த அவர்களின் மூர்க்கத்தமான தாக்குதலை ஆயுத வலிமை வாய்ந்த பிரிட்டிஷாரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இந்த போர் இரணடு ஆண்டுகள் (1857) வரை நீடித்தது. மலைப் பிரதேசங்களில் போர் நடந்தபோது, மறைந்திருந்து திடீரென்று அதிபயங்கரமாக பழங்குடியினர் தாக்கினர். இதனால் பிரிட்டிஷார் பின் வாங்கினர்.

பின்னர் யோசித்தனர். சதித் திட்டங்களைக் கச்சிதமாக நிறைவேற்றுவதில் வல்லவர்களான அவர்கள் மலையேறிச் சென்று போரிட்டு வெற்றி பெறுவது கடினம் என்பதை உணர்ந்து மாற்றுத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். அந்த திட்டத்தின்படி, மலையடிவாரத்தில் இருந்து கொண்டே தோட்டா இல்லாத துப்பாக்கியை பிரிட்டிஷார் வெடிக்கச் செய்தன.

அதற்குப் பதிலடியாக நீண்ட தொலைவிலிருந்து அம்புகளையும் ஈட்டிகளையும் அவர்கள் மீது பழங்குடியினர் எறிவார்கள். இவை அனைத்தும் வீணாகிவிடும். அப்போது தோட்டாக்கள் இல்லாமல் பிரிட்டிஷார் பின்வாங்கி விட்டார்கள் என்று எண்ணி பிரிட்டிஷாரை நெருங்கிச் சென்று தாக்கலாம் என்று முடிவு செய்து பழங்குடி-யினர் மலையின் கீழே வருவார்கள். அப்போது அவர்கள் எதிர்பாராதவிதமாக துப்பாக்கிகளில் தோட்டாக்களை நிரப்பி, தங்களது முழு பலத்தையும் பிரயோகப்படுத்தி பழங்குடி-யினரைச் சுட்டுப் பொசுக்குவார்கள். பின்னர் ஒவ்வொரு மலை கிராமமாக ஏறிச் சென்று அங்குள்ள பழங்குடி மக்களைக் கொன்று குவிப்பார்கள். ஆயிரக்கணக்கான, ஒரு பாவமும் அறியாத இந்தியப் பழங்குடியினர் தங்கள் ரத்தத்தை இந்த இந்திய மண்ணில் சிந்தினார்கள்.

இந்தப் பழங்குடியினரை கண்ணியப்படுத்த எண்ணிய இந்திய தபால்துறை, பழங்குடித் தலைவர்களான சிடோ மர்மு மற்றும் கான்ஹு மர்மு ஆகிய இருவருக்கும் 4,000 ரூபாய் மதிப்புள்ள அஞ்சல்தலையை 2002-ம் ஆண்டு வெளியிட்டு கௌரவப்படுத்தியது.

இந்தப் பழங்குடியினரை அடையாளப்படுத்தாது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு முழுமை பெறாது.

## தமாசு!

மனைவி : என்னங்க இப்படியே நான் உங்களுக்கு தினமும் சமச்சிப் போட்டுக்கிட்டு இருந்தா எனக்கு என்னதான் கிடைக்கப் போகுது சொல்லுங்க...

கணவன் : இப்படியே சமச்சிக்கிட்டு இருந்தா கூடிய சீக்கிரம் என்னோட எல்.ஐ.சி. பணம் உனக்கு கிடைச்சிடும்

மனைவி : ????

# இராசி பலன்கள்

கணித்தவர்: சிவமனோகரன் தொடர்புக்கு : 7200097256

**மேஷம்:** எதையும் சாதிக்கும் தைரியமுள்ள மேஷ ராசி அன்பர்களே! இந்த மாதம் மிகச் சிறப்பான மாதம். கிரக சூழ்நிலைகள் ஒன்றாக அமைந்திருக்கிறது. நினைத்ததை சாதிக்க, ஆசைப்பட்டு பொருள்களை வாங்க, தாய்வழி உறவின் ஆதரவை நாடுவீர்கள். செவ்வாய் சனி சாதகமாக இல்லாததால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவும். அடுத்தவர் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது.

பரிகாரம் : வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் அம்மனுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபடுவது நலம்.

**ரிஷபம்:** கலையுள்ளம் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே! பஞ்சமத்தில் குரு சிறப்பாக உள்ளதால் உங்கள் எண்ணம் எளிதில் நிறைவேறும். சூரியனும், சந்திரனும் சிறப்பாக உள்ளதால் உங்கள் திறமை பளிச்சிடும். நண்பர்கள் உறவினர்கள் ஆதரவு அதிகரிக்கும். இல்லத்தில் குழப்பம் நீடிக்கும். பொறுமை அவசியம். வண்டி வாகனம் மாற்றும் எண்ணம் மேலோங்கும்.

பரிகாரம் : பைரவ வழிபாடு நல்லது. குடும்பத்தோடு சிவாலயங்களுக்கு செல்வது உத்தமம்.

**மிதுனம்:** அனைவரையும் எடைபோட்டு வாழ்க்கை நடத்தும் மிதுன ராசி அன்பர்களே! தைரிய ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், ராகு, சுக்கிரன் இதனால் தைரியம் கூடும். அதே சமயம் குருட்டு தைரியமாகவும் அமையக் கூடும். சனி, செவ்வாய் பலமாக உள்ளதால் எந்த பிரச்சனையும் நேருக்கு நேர் சந்திக்கும் தைரியம் கூடும். தேவைக்கேற்ற பண வரவு உண்டு. அண்டை வீட்டாரை அனுசரித்து செல்லவும்.

பரிகாரம் : செவ்வாய், வியாழன் ஆகிய கிழமைகளில் முருகனை வழிபடுவது நல்லது.

**கடகம்:** நல்ல எண்ணங்களை சிறப்பாக பயன்படுத்தி வாழ்க்கையை சிறப்பாக அமைக்கும் கடக ராசி அன்பர்களே! இந்த மாதம் தன ஸ்தானமும், தைரிய ஸ்தானமும் மிக சிறப்பாக இருப்பதால், பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். தொழிலில் மாறுதல் அல்லது விரிவடையச் செய்யும் நோக்கம், குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றி மறையும்.

பரிகாரம் : புதன் கிழமையன்று மகாலட்சுமியை நெய்தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.

**சிம்மம்:** எதிலும், எப்பொழுதும் ஆளுமைத் தன்மை கொண்ட சிம்ம ராசி அன்பர்களே! இரண்டில் குரு இருப்பதால் பண வரவு சிறப்பாக இருக்கும். தகுந்த நேரத்தில் சரியான முடிவை எடுக்க திணறுவீர்கள். உடல் உஷ்ணப்படும். நரம்பு சம்மந்தமான நோய் ஏற்படும். உங்கள் அறிவுக்கு இந்த மாதம் அங்கீகாரம் கிடைக்கும்.

பரிகாரம் : ஞாயிறுதோறும் விநாயகப் பெருமானை நெய் தீபம் ஏற்றி வழிபடுவது நன்மை தரும்.

**கன்னி:** கனிவாகவும், இனிமையாகவும் பேசி மற்றவர்களை வசப்படுத்தும் கன்னி ராசி அன்பர்களே! இந்த மாதம் கிரக சூழ்நிலை அவ்வளவு சாதகமாக இல்லை. மனதில் குழப்பம் தோன்றி மறையும். எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்ய வேண்டும். தைரியம் நன்றாக இருக்கும். இந்த மாதம் ஓய்வு அதிகமாக காணப்படும். சதா யோசனையில் காலம் கழிப்பீர்கள். பண வரவு தேவைக்கு இருக்கும். பரிகாரம் : தட்சிணாமூர்த்தியை வழிபடுவது சிறப்பு. சிவன் கோவில் வழிபாடு சிறப்பு.



**துலாம் :** அழகிய ரசனைக்கொண்ட துலாம் ராசி அன்பர்களே! இந்த மாதம் வரவுக்கு ஏற்ற செலவு காணப்படும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குருவின் பார்வை சிறப்பாக உள்ளதால், வித்தை வெளிப்படும், வேலைவாய்ப்பு சிறப்பாக இருக்கும். செய்துவந்த வேலைகளை விரிவுபடுத்துவீர்கள். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் கைகூடும். நண்பர்கள் ஆதரவு சிறப்பாக காணப்படும். இல்லத்தில் மகிழ்ச்சி கூடும்.

பரிகாரம் : தட்சணாமூர்த்தி வழிபாடு சிறப்பு சேர்க்கும்.

**விருச்சகம் :** வலிமையான தேகம் கொண்ட விருட்சக ராசி அன்பர்களே! லாப ஸ்தானத்தில் குரு இருப்பதால் பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். தொழில் மேன்மையடையும். மாற்று தொழில் செய்யும் சிந்தனை மேலோங்கும். அந்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மேலும் பழைய வீட்டை புதுப்பிப்பீர்கள். அரசாங்க ஆதரவு உண்டு.

பரிகாரம் : அம்மன் ஆலய வழிபாடு , சிறப்பு சேர்க்கும். சென்னை அன்பர்கள், முப்பாத்தம்மன் கோயிலில் பாலுற்றி நல்லெண்ணை தீபம் ஏற்றி வழிபட்டால் வருமானம் பன்படங்காகும்.

**தனுசு :** புதுமையான சிந்தனைகளை கையாளும் தனுசு ராசி அன்பர்களே! பத்தாம் இடத்தில் குரு இருப்பதால், செய்தொழிலில் மாற்றம் சிலருக்கு இடமாற்றம், சிலருக்கு ஊர் மாற்றம் ஏற்படும். மூன்றில் கேது இருப்பதால் தைரியக் குறைவு ஏற்படும். சுக்கிரன் சிறப்பாக இருப்பதால் பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் குழப்பம் இருக்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

பரிகாரம் : குரு, சனி கிரகங்களுக்கு நல்லெண்ணை, நெய் தீபம் எற்றி வழிபடுவது நன்மை அளிக்கும்.

**மகரம் :** வெகுஜன தொடர்பில் சிறப்பு காணப்படும். மகர ராசி அன்பர்களே! குரு, சனி, சுக்கிரன் சிறப்பாக உள்ளதால் சமுதாய அந்தஸ்து மேலோங்கும். வார்த்தைகளில் கடுமை காணப்படும். அதை குறைத்துக் கொள்வது நலம் பயக்கும். வாயு தொந்தரவு, நரம்பு சம்பந்தமான நோய் தோன்றி மறையும். பணவரவு தேவைக்கேற்ப இருக்கும். அரசுவழியில் அனுகூலம் இருக்கும்.

பரிகாரம் : காஞ்சிபுரத்தில் உள்ள சித்திரகுப்தர் கோவில் செல்வது உத்தமம்.

**கும்பம் :** எல்லோருக்கும் நல்ல அறிவுரை வழங்கியும் பணத்தின் மீது மிகுந்த பற்று கொண்ட கும்ப ராசி அன்பர்களே! குரு பகவான் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால், பணத்தேவை கூடும். தேவைக்கேற்ப பணம் வருவதில் தாமதம் ஏற்படும். சூரியன் நீச்சம் பெறுவதால், அரசுவழி ஆதரவு இருக்காது. ஏற்கனவே செய்துவந்த தொழிலில் எந்த தொய்வும் இருக்காது. சிறப்பாக இருக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய முடியாமல் போனாலும் தாமதமாக முடியும்.

**பரிகாரம்** : ஞாயிற்றுகிழமைகளில் திருவொற்றியூர் அம்மனை வழிபட்டு, பட்டினத்தார் சமாதியில் தியானம் செய்வது உத்தமம்.

**மீனம் :** இனிய தோற்றத்தில் கடுமையான சொற்களைக் கொண்ட மீன ராசி அன்பர்களே! இம்மாதம் குருவின் பார்வை மிக பலமாக இருப்பதால் சமுதாய அந்தஸ்து கூடும். தொழில் சிறப்பாக நடக்கும். புது முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கிட்டும் அரசாங்க வழியில் ஆதரவு இருக்காது. யோசனைகளை தயங்கமாமல் சபையில் சொல்லலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பரிகாரம் : நவகிரக வழிபாடு மேன்மை சேர்க்கும்.



# ஒவ்வொரு ஆலயம் சிறப்புகள்

M திருவண்ணாமலை சுவாமி எப்போதுமே ராஜகோபுரம் வழியாக வராமல் பக்கத்து வாசல் வழியாகத்தான் வெளியே வருவார்.

M. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் மொத்தம் 14 கோபுரங்கள் உள்ளன. வேறு எந்த கோவிலிலும் இவ்வளவு அதிகமான கோபுரங்கள் இல்லை.

M கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன் கோவிலில் தயாராகும் எந்த நைவேத்தியப் பண்டங்களுக்கும் உப்பு சேர்ப்பதில்லை.

M ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலில் பெருமாள் கோவில்களில் கொடுப்பதுபோல் தீர்த்தம் கொடுக்கிறார்கள். வேறு எந்த சிவன் கோவிலிலும் இது போன்று தீர்த்தம் கொடுப்பது கிடையாது.

M மூலவரே வீதிவலம் வருவது, சிதம்பரம் நடராஜர் மட்டுமே.

M மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் மீன்கள் வளராது.

M கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகிலுள்ள கேரளபுரத்தில் சிவபெருமானுக்கு கோயில் உள்ளது. இங்கு அரச மரத்தடியில் நிறம் மாறும் அதிசய விநாயகர் இருக்கிறார். ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் வெள்ளை நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் கறுப்பாகவும் மாறி விடுகிறார். சந்திர காந்தக் கல்லால் உருவாக்கப்பட்ட இந்தச் சிலைக்கு இப்படி ஒரு சக்தி





இருக்கிறது.

M சிதம்பரம் ஆலயத்தில் ஒரே இடத்தில் நின்றபடி, ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளையும், ஸ்ரீ நடராஜரையும் தரிசிக்கலாம்.

M சைவர்களுக்குரிய திருவாதிரையும், வைணவர் களுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் ஒரே மாதத்தில் ஒரே திருக்கோயிலில் நடைபெறுவது சிதம்பரத்தில்.

M எல்லாத் திருத்தலங்களிலும் பெருமாளின் இடது கையில் தான் சங்கு காணப்பெறும், திருக்கோவிலூரில் மட்டும் வலது கையில் சங்கு வைத்துள்ளார்.

M இமயமலைச் சாரலில் இருக்கும் திருத்தலங்களில் ஒன்று பத்ரிநாத். மே மாதம் முதல் வாரம் நடைதிறப்பார்கள். நவம்பர் மாதம் முதல் வாரத்தில் மூடுவார்கள். நவம்பரில் கோயிலை மூடும் போது ஒரு தீபம் ஏற்றுவார்கள். அந்த தீபம் மீண்டும்



கோயில் திறக்கப்படும்வரை அதாவது, ஆறுமாதம் எரிந்துகொண்டே இருக்கும்.

M காசியில் பல்லிகள் இருந்தாலும் ஒலிப்பதில்லை.

M காசி நகரைச் சுற்றி 45 கல் எல்லை வரை கருடன் பறப்பதில்லை.

M குளித்தலை, மணப்பாறை வழியில் இருப்பது ஐவர் மலை என்ற ரத்தினகிரி மலை உள்ளது. இம்மலை மேல் காகங்கள் பறப்பதில்லை.

M நவக்கிரகப் பிரதிஷ்டை கோவிலில் வடகிழக்குப் பகுதியில்தான் அமைய வேண்டும் என்று சிற்ப சாஸ்திரம் கூறுகிறது.

M ஆழ்வார்குறிச்சியில் நடராஜர் சிலை ஒரே கல்லினால் ஆனது. தட்டினால் வெண்கல ஓசை வரும்.

M சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் உட்கார்ந்த கோலத்தில் மிகப் பெரிய திருமேனி. இவ்வளவு பெரிய ரூபமுள்ள அம்பிகை வேறு எந்த கர்பகிரகத்திலும் இல்லை. இத்திருமேனி சில மூலிகைகளால் ஆக்கப்பட்டது.

M தேனி மாவட்டம் கம்பம் அருகில் உள்ள சுருளிமலையில் குகையில் விபூதி அள்ள அள்ள வந்து கொண்டே இருக்கும். இந்தக் குகைக்குப் பெயர் திருநீர்குகை. திருநீறு தானாகவே விளையும் மற்ற திருத்தலங்கள், கதிர்காமம், மருதமலை, திருநீற்று மலை, கங்கை கரையில் உள்ள திருவருணை.

M ரத்னகிரி மலையில் உள்ள முருகனுக்கு அபிஷேகம் செய்யும் பால் சிறிது நேரத்தில் தயிராக மாறும் அதிசயம் நடக்கிறது.

M சென்னிமலை முருகனுக்கு அபிஷேகம் செய்யும் தயிர் புளிப்பதில்லை.

M தேனி மாவட்டம் தெப்பம்பட்டியில் உள்ள வேலப்பர் கோவிலில் உள்ள மூலவர் சுயம்பு மூர்த்தி. இந்தக் கோவில் அருகில் உள்ள மாமரத்தின் அடியில் இருந்து ஊற்று நீர் பொங்கி வந்து கொண்டேயிருக்கிறது.

M அம்மன் சந்நிதி இல்லாத கோயில் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில்.

## எண்ணத்தில் ஆசையை விதைக்க வேண்டும்

இன்று நம்மில் பலர் செய்யும் தவறு என்னவென்றால், நாம் ஆசைப்பட்டது கிடைக்கவில்லையே என்று ஏங்குகின்றோம். அவனுக்கு மட்டும் இது கிடைத்திருக்கின்றது என்று புலம்புகின்றோம். வருந்துகின்றோம். இதுதான் நாம் செய்யும் தவறு. இந்த தவற்றை செய்யும்வரை நாம் நினைத்தது எதுவுமே நடக்காது.

நாம் நினைத்தது நடக்க வேண்டுமென்றால், நம்முடைய ஆசை, சிந்தனை, செயல் இவையாவும் நமக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். நமக்கு பொருந்தாத விஷயங்கள் நமக்கு நிச்சயம் கிடைக்காது. எனவே ஆசைப்படு. அந்த ஆசையின் தன்மையை உற்றுநோக்கு; அப்போது தெரியும். இது கிடைக்கும் அல்லது கிடைக்காது என்று. இதைத்தான் நம் பெரியவர்கள் கூறினார்கள், கடற்கரை முழுவதும் மணல் இருந்தாலும், எண்ணெய் பூசிய உடம்போடு உருண்டாலும், ஒட்டுகின்ற மண்தான் ஒட்டும். அதுபோல தான் ஆசையும்.

மேலும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உணர்வு எல்லோருக்கும் இருக்கும். அந்த பணத்தை நோக்கி மட்டும் உங்கள் பயணம் இருந்தால், அது எப்படி தெரியும்? உங்கள் நிழலை நீங்கள் கடக்க முயற்சி செய்வதுபோல் தான். அதாவது உங்கள் முன்னே தெரியும் நிழலை நீங்கள் கடக்க முயற்சி செய்தால் அது நடக்குமா? நீங்கள் முன்னே செல்லச் செல்ல அந்த நிழலும் முன்னே சென்று கொண்டிருக்கும். ஆக நிச்சயமாக அதை கடக்க முடியாது. இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உடனடியாக திரும்பி நடந்தால் அந்த நிழல் உங்கள் பின்னே வரும். அதுபோலத்தான் நம் எண்ணமும் ஆசையும் நம் எண்ணத்தில் ஆசையை விதைக்க வேண்டும். விதைப்பது மட்டும் நம் கடமை. முளைக்கச் செய்வது இறைவனின் கருணை...

–சிவ மனோகரன்

● விழிப்புணர்வுத் தொடர்

# விளம்பரம் பார்த்து மனை வாங்கப் போறீங்களா?



சென்னையில் முழுமையாகவும், காஞ்சிபுரம், திருவள்ளூரில் சில பகுதிகள் சி.எம்.டி.ஏ. அங்கீகார வரம்பில் வருகிறது. ஏனைய பகுதிகள் அனைத்தும் டிடிசிபி அங்கீகார வரம்பில்தான் வருகிறது. இந்த இரு அமைப்புகளின் அங்கீகாரங்களைப் பெறாமல் விற்கப்ப்டும் மனைகளை வாங்கினால் பல சிக்கல்களை சந்திக்க நேரிடலாம்.

வாங்கிய மனை, மனையாகவே இருக்கும் வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்த மனையில் வீடு கட்ட அனுமதி வேண்டி, விண்ணப்பிக்கும் போதுதான் பிரச்சினைகள் தெரிய வரும். முறையான அங்கீகாரம் இல்லாத மனையில் கட்டிடம் கட்ட அனுமதி கிடைக்காது. அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட மனையில் வீடு கட்ட வங்கிகளும் வீட்டுக் கடன் அளிப்பதில்லை. பின்னாளில் பிரச்சினை வரலாம் என்ற கோணத்தில் வங்கிகள் கடன் வழங்காமல் பின்வாங்கிவிடும்.

பஞ்சாயத்து அப்ரூவல் போதுமானதா?

பஞ்சாயத்து மனையில் அரசின் திட்டங்கள், கட்டுமானங்கள் ஏதேனும் வருகின்றனவா? சாலை விரிவாக்கம் செய்யப்படக்கூடிய பகுதியா? என்பதெல்லாம் சி.எம்.டி.ஏ., டி.டி.சி.பி. அமைப்புகளுக்குத்தான் தெரியும். எனவேதான் இந்த அமைப்புகளின் அங்கீகாரத்துக்கு இவ்வளவு மதிப்பும் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து அப்ரூவல் என்று சொல்லி விற்கப்படும் மனைகளை வாங்காமல் இருப்பது நல்லது. கிராமப்புறங்கள், அதை ஒட்டியுள்ள பகுதிகளில் மனை வாங்கும்போது அங்கீகாரச் சான்றுகளை கவனமாக சரி பார்ப்பதே ஏமாறால் இருக்க ஒரே வழி.

வீட்டு மனைகளக்கு அங்கீகாரம் வழங்கம் அதிகாரம் பெற்ற அமைப்புகள் தமிழ்நாட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் கழகமான சி.எம்.டி.ஏ.வும், நகர ஊரமைப்பு மற்றும் திட்டமிடுதல் இயக்கமான டி.டி.சி.பி.யும் ஆகும்.

இந்த இரு அமைப்புகளிலும் அனுமதி பெற்ற நிலங்களில் பெரிய பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. நீங்கள் வாங்கும் நிலத்திற்கான கிரயப் பத்திரத்தல் தொடங்கி, பட்டா உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் இந்த

REAL ESTATE தொடர் 4



அமைப்புகள் தெளிவாக ஆராய்ந்த பிளகுதான் இவ்வமைப்புகள் அனுமதி வழங்கும். அதனால் ஏதேனும் பிரச்சனைகள் இருந்தால் அது ஆரம்பத்திலேயே தெரிய வந்துவிடும். அதாவது இந்த அனுமதி அளிக்கும் அமைப்புகள் விதித்துள்ள விதிகள் கீழ் அந்த ப்ளாட்டுகள் இல்லையென்றால் அனுமதி வழங்கப்பட மாட்டாது. ப்ளாட்டுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் சாலைகள் எத்தனை அடி இருக்க வேண்டும் என்பது போன்ற பல விதிகளை இந்த அமைப்புகள் வகுத்துள்ளன. அதைப் பின்பற்றாத நிலங்களக்கு அனுமதி கிடைக்காது.

சென்னையும் சென்னையின் சில புறநகர்ப் பகுதிகளும் சி.எம்.டி.ஏ.வின் அனுமதி அளிக்கம் பகுதிகளின் கீழ் வருகின்றன. அதாவது காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தின் சில பகுதிகளும் சி.எம்.டி.ஏ.வின் அனுமதி அளிக்கும் பகுதிக்குட்பட்டவைதாம். இதற்க அப்பாற்பட்ட தமிழ்நாட்டின் மற்ற பகதிகள் டி.டி.சி.பி.யின் அனுமதியின் கீழ் வரும். ஆனால் இந்த இரு அமைப்புகளின் அனுமதி மட்டும் போதாது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதியும் பெறுவது அவசியம். டி.டி.சி.பி., சி.எம்.டி.ஏ. என்ற இரு அமைப்புகள் தவிர பஞ்சாயத்து அப்ரூவல் என்பது பஞ்சாயத்து தலைவர் தனது லெட்டர் பேடில் எழுதிக் கொடுத்தாலே போதும். பஞ்சாயத்து அப்ரூவல் மனைகளை விற்பனைக்குத் தயாராக்கிவிடுகிறார்கள். ஆனால், இதில் சில கிக்கல்கள் உண்டு. ரியல் எஸ்டேட் தொழில் மோகம் தமிழ்நாட்டின் சின்னச் சின்ன ஊர்களிலும் பரவி மக்களை ஆட்கொண்டுள்ளது அனைவரும் அறிந்ததே. மிகச்சிறிய நகரங்களில் சட்டென அருகில் உள்ள பஞ்சாயத்துகளிடம் அனுமதி வாங்கித் தங்கள் விற்பனையை தொடங்கிவிடுகிறார்கள். பஞ்சாயத்து அமைப்பும் ஓர் ஜனநாய அமைப்புதான். ஆனால் என்ன பிரச்சினை என்றால் பஞ்சாயத்து அமைப்புகள் ப்ளாட்டுகளுக்கான விதிமுறைகளை ஆராய்வதில்லை. அதற்கான அமைப்பு முறை அங்கு இல்லை எனலாம்.



அதாவது சம்பந்தப்பட்ட மனைக்கான ஆவணங்களை லேஅவுட் பிளான்களை பஞ்சாயத்துத் தலைவரோ, பஞ்சாயத்து அதிகாரிகளோ சிரத்தையுடன் பார்ப்பதில்லை. அதனால் இம்மாதிரியான நிலங்களின் உண்மைத்தன்மை சந்தேகத்திற்கிடமானது. மேலும் பஞ்சாயத்து அப்ரூவல் நிலங்களுக்கு வங்கிக்கடன் கிடைப்பதிலும் சிக்கல் எழும். வங்கிகள் இந்த நிலங்களை நம்பிக் கடன் அளிக்க முன்வராது. இதிலிருந்து பஞ்சாயத்து அப்ரூவல் நிலங்களின் சிக்கலை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**தொடரும்...**

HA HA HA

## ஜோக்ஸ்

பேசன்ட் : நர்ஸ் நீங்க என்னோட இதயத்தைத் திருடிட்டீங்க.

நர்ஸ் : அதுக்கு முன்னாடி டாக்டர் உங்க கிட்னியைத் திருடிட்டாரு.

பேசன்ட் : ????

# நீங்களும் நிர்வாகியாகலாம்



தொடர்-4

**விசேஷகுணக் கோட்பாடு :**

அண்மைக்காலக் கோட்பாடு என்றும் குறிப்பிடுகிறார்கள். சிலரின் நடவடிக்கைகளைக் கொண்டே அவர் நிர்வாகியா? அல்லது சாதாரண நபரா? என்று அறிந்து கொள்ள இயலும்.

இந்தக் கோட்பாட்டின்படி ஒரு நிர்வாகியின் உடலமைப்பைக் கொண்டும் சமுதாயத்தில் அவரது அணுகுமுறையைக் கொண்டும். அவரது தனிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்டும் அவரது தகுதியை அறியலாம் என்கிறார்கள்.

இது உடல் தகுதி சமுதாயத் தகுதி சுய தகுதி எனவும் பிரிக்கப்படுகிறது.

உடல் தகுதி என்பதில் வயது முதலில் கவனிக்கப்படுகிறது. இளம் வயதுக்காரரா? அல்லது நடுத்தர வயதுக்கும் குறைந்தவரா? என்பது தான் முக்கியம் உயரமானவராகவும் கவர்ந்திழுக்கும் தோற்றத்துடனும் இருக்க வேண்டும்.

சமுதாய தகுதிகள் எனும்போது சம்பந்தப்பட்டவரின் படிப்பு சமுதாயத்தைப் பற்றிய ஞானம், அவரது ஒத்துழைப்பு, கையாளும் திறமை உள்படப் பல தகுதிகள் ஆராயப்பட வேண்டும்.

சுய தகுதி என்று சொல்லும்போது நிர்வாகியின் தன்னம்பிக்கை, நேர்மை, சுறுசுறுப்பு, மன உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கையாளும் திறன் போன்ற பல தகுதிகள் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

மேற்கண்ட மூன்று தகுதிகளில் முதல் தகுதிக்கு விதிவிலக்கு அளிக்கலாம். அதாவது, அடுத்த இரண்டு தகுதிகள் சரியாக இருந்தால் முதல் தகுதிகளில் தளர்ச்சியை உண்டாக்கலாம்.

புகழ் வாய்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகளைக் கவனித்துப் பாருங்கள் அவர்களில் சிலர் உயரம் குறைந்தவர்களாக இருக்கலாம். கண்ணைக் கவரும் தோற்றமில்லாமல் இருக்கலாம். அழகில்லாமல் இருக்கலாம். முதுமை வாய்ந்தவர்களாக இருக்கலாம் ஆனால் சிறந்த நிர்வாகியாக அங்கீகரிக்கப் பட்டிருப்பார்கள்.

சமுதாய தகுதியிலும் சுய தகுதியிலும் அவர்கள் சிறந்து விளங்குவதுதான் இதற்கு காரணம். இதன் காரணமாக முதல் தககியைப் பற்றி எவரும் அக்கறை கொள்வது இல்லை.

அதாவது உடல் தகுதியை விட அறிவுத் தகுதியே நிர்வாகிக்குத் தேவை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தககிகளில் குறைந்தவர்களும் கூட அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் அல்லது அனுபவத்தின் மூலம் சிறந்த நிர்வாகியாக வாய்ப்புள்ளது.

XY **கோட்பாடு :**

டக்ளஸ் மெக்கிரிகர் என்பவர் தன்னுடைய The Human Side of Enterprices என்ற நூலில் X மற்றும் Y கோட்பாடுகள் என்பது பற்றி விளக்கியுள்ளார்.

ஒரு நிர்வாகி தனது ஊழியர்களையோ அல்லது தனது குழுவில் உள்ளவர்களையோ எப்படிக் கையாள வேண்டும் என்பதை இந்த XY கோட்பாடுகள் விளக்குகின்றன.

**தொடரும்...**



# MBA மேலாண்மையின் பிதாமகன்

## பீட்டர் டிரக்கர்



**ஒரு** தொழிலை நடத்துவதில் சிறந்த மேலாண்மை அறிவு இருக்க வேண்டும். புத்தகங்களை படிப்பதால் மட்டுமே அந்த அறிவு கிடைத்து விடாது. அனுபவமும் இருக்க வேண்டும். அந்த அனுபவங்களையே புத்தகமாக எழுதி அதை படிப்பவர்களும் தொழிலில் வெற்றி பெறுகிறார்கள்.

வி.ஜி. பன்னீர்தாஸ், எம்.ஜி.முத்து, வசந்த் & கோ வசந்தகுமார் போன்றவர்கள் சாதாரணமாக சைக்கிளில் பயணித்து பின்னர் மிகப்பெரிய தொழிலதிபர்களாக விளங்கி இருக்கின்றார்கள். வி.கே.டி.பாலன் என்பவர் டிராவல்ஸ் நடத்தி வருபவர். ஒரு வார இதழ் அவரைப் பற்றிய கட்டுரையில் அவரின் வெற்றிக்கான பயணத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது. அவர் ஆரம்பத்தில் தான் பட்ட கஷ்டங்களை தெரிவித்து அந்த கஷ்டங்களிலிருந்து தான் பெற்ற அறிவை தன்னுடைய தொழிலின் மேலாண்மைக்கு பயன்படுத்தினார்.

இப்படி எண்ணற்ற தொழிலதிபர்கள் தங்கள் பாதையில் கரடுமுரடான வழியில்தான் தொடரவேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் ஒருவேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டு பிளாட்பாரத்தில் படுத்து உறங்கியவர்கள் பின்னர் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியேறும் அளவுக்கு தங்கள் தொழிலை வளர்த்துக் கொள்ளக் காரணம் சிறந்த மேலாண்மை அறிவுதான்.

அத்தகைய (MBA) முதுகலை மேலாண்மை நிர்வாகம் தொடர்பாக பல்வேறு நூல்களை எழுதியவர் பீட்டர் டிரக்கர். 1909-ம் ஆண்டு நவம்பர் 19-ல் ஹங்கேரியில் பிறந்த பீட்டர் டிரக்கர் பிராங்பேர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றார்.

இவரின் நூல்களைப் படித்து அதனை தங்களின் தொழில் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்பவர்கள் ஏராளம். அதனால்தான் பீட்டர் டிரக்கரை மேலாண்மையின் பிதாமகன் என்று அழைக்கிறார்கள்.

1954ல் “மேலாண்மை”என்ற புத்தகம் 20ம் நூற்றாண்டில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இவருக்கு 2002ம் ஆண்டு ஜூலை 9-ம் நாள் “**சுதந்திர ஜனாதிபதி பதக்கத்தை**” அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யு புஷ் வழங்கினார். டிரக்கரின் 39 புத்தகங்களும் முப்பத்தாறுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**மேலாண்மையின் பிதாமகன் என்றழைக்கக்கூடிய அளவுக்கு பீட்டர் டிரக்கரின் நூல்கள் அமைந்தன. அந்த நூல்களை பின்பற்றி மேலாண்மையில் சிறந்து விளங்கவும், தான் சார்ந்திருக்கின்ற எந்தத்துறையானாலும் அந்த துறையில் சிறப்பாகவும் செழிப்பாகவும் செழிக்க இவரது கருத்துக்கள் அமைந்துள்ளன. அவரது கருத்துக்களை உள்வாங்கி தொழிலில் ஈடுபடும் எல்லோரும் மேலாண்மையில் சிறந்து விளங்கி நாம் தொழிலில் முன்னேற்றம் காணலாம்.**



புஷ் உடன் பீட்டர் டிரக்கர்

# நமக்கு நாமே...




திண்டுக்கல் முபாரக்

செல்ஃப் டெவலப்மென்ட் என்பது தன்னை தானே மெருகேற்றிக் கொள்ள வேண்டிய விஷயம். பணம் சம்பாதி, புகழைச்சேர், குடும்பத்தை கவனி... இத்யாதி இத்யாதிகளை எல்லாம் தாண்டி தன்னை நேசித்தல் என்பது தான் மனித இனத்துக்கு மிகவும் முக்கியமான விஷயம். தன்னை நேசிக்காத மனிதனால் வாழ்ந்த... வாழுகின்ற...வாழப்போற வாழ்க்கைக்கு ஒரு முழுமையே இருக்காது. நாம ஒரு பைக் வாங்குறோம்னு வச்சுக்குவோம், அதுக்கு இரண்டு மூணு மாசத்துக்கு ஒருதடவையாது சர்வீஸ் விட்டு பைக்க சுத்தம் பண்ணினா தானே மீண்டும் சிறப்பா ஓடும். ஆனா நம்ம வாழ்க்கைல நம்மை பற்றிய நேர்மையான சுய மதிப்பீடை நாம செஞ்சுருக்கவே மாட்டோம், நம்ம கிட்ட என்ன பிளஸ், எது மைனஸ்ன்னு நம்மில் பாதி பேருக்கு தெரியாது.விளைவு ஒரு கட்டத்தில் எது செஞ்சாலும் நிம்மதியில்லைனு ஒன்னு சாமியார் காலிலோ இல்ல லட்சக்கணக்கில் பீஸ் வாங்கும் கார்ப்பரேட் நிறுவனங்களிடமோ பலர் மாட்டிக்கொள்கிறார்கள். நம்மை நாமே மேம்படுத்திக் கொள்ள, நம்மை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும் முக்கியமான ஐந்து டிப்ஸ் இங்கே.

பொதுவா நம்ம மூளை 'அலார்ட்டாய்க்கடா ஆறுமுகம்' மோடுல தான் பெரும்பாலும் இருக்கும். படிக்கட்டுல ஏறும்போது, பைக்ல போகும்போது, வெயில்ல ரொம்ப நேரம் நிக்கும்போதுன்னு எப்பவுமே நம்ம மூளை அலர்ட்டா வேலை பாத்துகிட்டு தான் இருக்கும். இதெல்லாம் ஏன்னு கேட்டா டிசைன் அப்பிடி. மனிதனுக்கு பொதுவாக பாதுகாப்பு உணர்வு ரொம்பவே அதிகம். இதனால் டிஃபன்ஸிவ் மோட்ல தான் பெரும்பாலானவர்கள் சுத்துகிறார்கள். யாரைப் பார்த்தாலும் தன்னையறியாமல் பயம், நடுக்கம் எல்லாம் வந்துரும். குறிப்பா அலுவலகத்தில் சிலர் மேலதிகாரிகளை பார்த்தாலே நடுங்குவார்கள், ஒரு சிலர் போலீசாரை பார்த்தாலே இருக்குற இடம் தெரியாம இருந்துட்டு போயிடணும்டா தம்பின்னு ஒதுங்கிச்செல்வார்கள். இது எல்லாமே நம்மகிட்ட நெகட்டிவ் மைண்ட்செட் இருக்குங்கிறத தெளிவாக கட்டம் போட்டு காட்டிக்குடுத்துடும். யாரைப் பாத்தாலும் முகத்துக்கு நேராப் பாத்து கண்களை பார்த்து பேசுறதுக்கு முதலில் கத்துக்கணும். எந்தப் பிரச்னை ஏற்பட்டாலும் சரி, மனச்சோர்வை உடலில் காண்பிக்கவே கூடாது. கம்பீரமும், மிடுக்கும் நமது மனச்சோர்வை உடைத்து நம்மை புத்துணர்ச்சியடையச் செய்யும்.

ரஜினிகாந்த் ஒரு மேடையில் பேசும்போது இப்படிச்சொன்னார். "இன்னிக்கு நாம இருக்குற நிலைமைக்கு காரணம் நேற்று நாம செஞ்ச வொர்க். நேற்றைய உழைப்பின் பயனை இன்னிக்கு அடைஞ்சிட்டு இருக்கோம். இன்னிக்கு நாம எப்படி உழைக்கிறமோ அதோட பயனை தான் நாளை அனுபவிக்க போறோம். எனவே எதிர்காலத்தை குறித்து கவலைப்படாதே. எதிர்காலம் உன் கையில்" என்றார். இதை அப்படியே நாமளும் பின்பற்றலாம். நாம வாழ்க்கையில் எந்த வயசுல எந்த ரேஞ்சுல எந்த எடத்துல இருக்கணும்னு முடிவு பண்ண வேண்டியது நாமதான். குறிக்கோளை நாம அடைகிறோம், அடையவில்லை என்பது பிரச்னை இல்லை. ஆனால் குறிக்கோளை நோக்கி ஓடினோமா என்பது தான் கேள்வி. அது மட்டும்தான் மன திருப்தியை தரும்.

குறிக்கோள் என்றவுடனே வீடு கட்ட வேண்டும், 45 வயதில் கோடீஸ்வரனாக வேண்டும் என்பது தான் என நினைத்து, மை கோல் ஈஸ்னு ஒரு டைரில எழுதி வீட்டுல எங்கயாச்சும் தூக்கிப்போட்டுட கூடாது பாஸ். பெரிய குறிக்கோள் என்பது இருக்க வேண்டியது தான் ஆனால் குட்டிக்குட்டி குறிக்கோளும் அவ்வப்போது இருக்க வேண்டும். ஒரு



ரெஸ்டாரண்டில் சாப்பிடுவது, மாதம் ஒரு புத்தகம் படிப்பது, பிடித்த இடத்துக்கு டூர் செல்வது, கிடார் கற்றுக்கொள்வது, போட்டித் தேர்வில் பாஸாவது, ஐம்பது பரோட்டாவை ஒரே நேரத்தில் சாப்பிடுவது என எப்போதும் சின்னச் சின்ன குறிக்கோள்களை வைத்து அதனை அடைய பழகுங்கள். அதுவே உங்களுக்கு பெரிய குறிக்கோளை அடைய பெரும் மன வலிமையைத்தரும்.

நமக்கு மிகப்பெரிய எதிரி யார் தெரியுமா? ஸ்ட்ரெஸ் தான். உடலையும், மனதையும் ஒரு சேர இது பாதிக்கும். ஸ்ட்ரெஸ்ஸை போக்க ஒரே வழி ஆன்டி ஸ்ட்ரெஸ் விஷயங்களை கண்டுணர்ந்து செய்வது தான். நமது சமூகத்தில் ஸ்ட்ரெஸ் பஸ்டர் என்றால் நண்பர்களுடன் கூட சேர்ந்து குடிப்பது, சிகரெட் பிடிப்பது, தியேட்டருக்கு செல்வது, உணவகம் செல்வதுதான் என்ற எண்ணம் பெரும்பாலானவர்களுக்கு உண்டு. இவையெல்லாமே தற்காலிக நிவாரணிகள் மட்டுமே. தவிர, இவற்றில் சில உடலுக்கு கேடானவையும்கூட. உங்களை ஏதாவதொரு புது செயலில் ஈடுபடுத்தும் போது தான் மன அழுத்தம் முற்றிலுமாக நீங்கும். ஓவியம் வரைவதோ, சுற்றுலா செல்வதோ, எழுதுவதோ, கார் ஓட்டுவதோ எதாவது ஒரு நல்ல விஷயம்.. அது உங்களுக்கு பிடிப்பதாக இருக்க வேண்டும்.. அதைச் செய்யுங்கள். அவை தரும் அனுபவம் உங்களை ஊக்கமூட்டுவதாக இருக்க வேண்டும்.

உங்களுக்குள்ளே நிச்சயம் ஒரு பிரமாதமான கிரியேட்டர் இருக்கிறார் பாஸ். சின்ன சின்ன விஷயங்களுக்கும் கிரியேட்டிவாக யோசியுங்கள். உங்கள் ரூமையோ, வீட்டையோ குட்டிக் குட்டி கிரியேட்டிவ் விஷயங்களால் அழகாக்குங்கள். உங்களுக்குள் ஒரு கவிஞரோ, திரைக்கதை ஆசிரியரோ, கதாசிரியாரோ இருந்தால் அதை வெளியே கொண்டு வாருங்கள். கையில் கிடைக்கும் எந்த ஒரு பொருளாக இருந்தாலும் சரி அதை வித்தியாசமாக எப்படி பயன்படுத்தலாம் என்பதை யோசியுங்கள். படிப்பிலோ, வேலையிலோ, பிசினஸிலோ கிரியேட்டிவ் விஷயங்களை புகுத்துபவர்கள் தான் பின்னாளில் வெற்றியாளர்களாக உருவாகிறார்கள்.கிரியேட்டிவில் நல்ல கிரியேட்டிவ், கெட்ட கிரியேட்டிவ் என ஒன்றும் கிடையாது எனவே பயப்படாமல் உங்கள கற்பனைச் சிறகை விரியுங்கள்.

நாம எதுக்கு உயிர்வாழுறோம், நமக்கு என்ன தேவை, நம்முடைய குறிக்கோள் என்ன.. போன்ற பல கேள்விகளுக்கு நமக்கே சரியான பதில் தெரியாது. எது உங்களுக்கு நிம்மதியை தரும் என்றொரு கேள்வியை யாரிடம் கேட்டாலும் ஒரு லிஸ்ட் அடுக்குவார்கள். ஆனால் நிஜத்தில் அவை கிடைத்திட்டாலும் அவர்கள் நிம்மதியாக இருக்க மாட்டார்கள் என்பது தான் நிதர்சனம். சரி இதற்கு எது சரியான தீர்வு என்கிறீர்களா? 'பிடித்ததை செய்.. பிடித்தமாதிரி வாழ்!' என்பது தான் பதில். எல்லாரும் படிக்கிறார்கள், பத்தாவதில் ஸ்டேட் பர்ஸ்ட் எடுத்து, பன்னிரெண்டாவதில் 199 கட் ஆப் வாங்கி மருத்துவமோ, பொறியியலோ சேர்ந்து அங்கே எந்நேரமும் படித்து பிறகு நான்கு அல்லது ஐந்து இலக்கங்களில் சம்பளம் வாங்குகிறார்கள், கார் பங்களா என செட்டில் ஆகிறார்கள். வருடம் இரண்டு வெளிநாட்டு டூர் செல்கிறார்கள், ஃபாரின் சரக்கு அடிக்கிறார்கள் என இன்னொரு நபரின் வாழ்க்கையை பார்த்து காப்பி அடித்து வாழ வேண்டாம். உங்களுக்கு ஐரோப்பாவை சுற்றுவதோ, காசியில் திரிவதோ, இமயமலை ஏறுவதோ, முனைவர் பட்டம் வாங்குவதோ, ராணுவத்தில் சேருவதோ, சமூகத்துக்காக உழைப்பதோ எது பிடிக்குமோ அதைச் செய்யுங்கள். அதற்கு தெளிவாக திட்டமிடுங்கள், அதற்கான உழைப்பை கொட்டுங்கள். மனது முழுக்க வேறொரு ஆசையை நிறைத்துக்கொண்டு போலி வாழ்க்கையை வாழ்வதில் எந்த அர்த்தமும் கிடையாது என்பதை உணருங்கள். சேஃப்டியாக வாழ வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டு இன்னொருவரின் விருப்பத்துக்கு உங்கள் உடலை ஊடகமாக தராதீர்கள். அது எந்தக் காலத்திலும் மன நிம்மதியை தராது.

HA HA HA


## சிரிங்க...

**தோழி 1 :** என்னோட அம்மாவும் அப்பாவும் என்னை ரொம்ப மிரட்டினாங்க. அதனாலதான் நான் ரமேஷ மறந்துட்டு அவங்க சொல்றவனையே கல்யாணம் பண்ணிக்கலாம்னு சம்மதிச்சேன்.

**தோழி 2 :** அப்படி என்னதாண்டி மிரட்டினாங்க?

**தோழி 1 :** தொடர்ந்து ரமேஷ் கூட பழகினா அப்புறம் அவனையே கல்யாணம் பண்ணி வச்சுடுவேன்னு மிரட்டினாங்க.

**தோழி 2 :** ??????




G மாதம் ஒரு புத்தகமாவது படியுங்கள்.

G ஆரோக்கியம் தராத உணவு வகைகள் எவ்வளவு சுவையாக இருந்தாலும் உண்ணாதீர்கள்.

G உங்களுக்கு என்ன வயதானாலும் பரவா யில்லை. விருப்பமான துறைகளில் நடக்கும் பயிற்சி வகுப்புகளில் பங்கெடுங்கள்.

G வருமானத்திற்கான வழி மிகவும் முக்கியம். அதில் எந்த சமரசமும் செய்து கொள்ளாதீர்கள்.

G முடிந்தவரை கடன்களைக் கட்டி விடுங்கள். வேண்டாத செலவுகளை நிறுத்தி விடுங்கள்.

G விடியும் முன்னால் எழுந்து விடுங்கள். ஒருநாளின் அலுவல்களை முன் கூட்டியே திட்டமிடுங்கள்.

G முப்பதுகளைக் கடக்கும் முன், மற்றவர்கள் சொல்லாமலே சர்க்கரை, உப்பு ஆகியவற்றை கணிசமாகக் குறைத்து விடுங்கள். முடிந்தால் தவிர்த்து விடுங்கள்.

G எக்காரணம் கொண்டும் காலை உணவைத் தவிர்க்காதீர்கள்.

G நிற்கையில் நேராக நில்லுங்கள். பேசுகையில் கண்களைப் பார்த்துப் பேசுங்கள்.

G புன்னகை முகமும் இதமான பேச்சும் உங்கள் இயல்புகளாகவே இருக்கட்டும்.

G வாரம் மூன்று முறை யாவது உடற்ப யிற்சி செய்யுங்கள். முடிந்த வரை நடந்து செல்லுங்கள்.






# வெற்றிக்கு வழி

எஸ். சுருதிலஷ்மி
STD-XI
VIDHYA VIKAS MATRICULATION
HIGHER SECONDARY SCHOOL
KARAMADAI



G சிறு குறிப்போ, கடிதமோ, கட்டுரையோ, பிழையில்லாமல் எழுதுவதில் கவனம் செலுத்துங்கள்.

G ஒருவர் இல்லாதபோது அவருடைய சிறப்பம்சங்களையே பேசுங்கள்.

G அரட்டைப் பேச்சுக்களையும் அபவாதங்களையும் ஊக்குவிக்காதீர்கள்.

G மற்றவர்களின் தவறுகளை மன்னி யுங்கள். ஒரு போதும் மறக்காதீர்கள்.

G உங்கள் வாழ்வின் ரகசிய அம்சங்கள் முடிந்தவரை குறைவாகவே இருக்கட்டும்.

G குடும்பம் என்கிற எல்லையைக் கடந்து, பொது அமைப்பு எதிலாவது ஈடுபடுங்கள்.

G மாதம் ஒரு முறையாவது உங்கள் தகுதிகளையும் தவறுகளையும் பட்டியல் இடுங்கள்.

G மற்றவர்களைப் பேச விடுங்கள். அவர்கள் மேல் உங்களுக்கு இருக்கும் அக்கறையை உணர்த்துங்கள்.

G உங்கள் நேரத் திற்கும், மற்றவர்கள் நேரத்திற்கும் உரிய மரியாதை கொடுங்கள்.

G உங்களிடம் இல்லாத தகுதிகள் இருப்பதாக நம்பவோ நம்ப வைக்கவோ முயலாதீர்கள்.

G உங்கள் திறமைகளை நீங்களே விவரித்துக் கொண்டிரா தீர்கள். உரிய நேரத்தில் நிரூபியுங்கள்.

G மேடைக் கூச்சம், கேமரா கூச்சம் இல்லாமல் இருங்கள்.

G தண்ணீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்துவது தான் எதிர்காலத்திற்காக சேர்க்கும் சொத்துக்கள்.

G உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் மற்றவர்கள் மேல் திணிக்காதீர்கள்



# செவாலியே விருது பெற்ற நாயகன்

கமலஹாசனுக்கு சமீபத்தில் பிரான்ஸ் அரசு செவாலியே விருது அறிவித்துள்ளது. இதற்கு முன்பு இந்த விருது நடிகர் திலம் சிவாஜி கணேசனுக்கு கிடைத்தது. சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் குறிப்பிடும்போது, “எங்கள் தலைமுறையின் நடிகர் திலகம்” என்று பாராட்டினார்.

தன்னுடைய குழந்தைப்பருவத்தில் களத்தூர் கண்ணம்மா படத்தில் நடித்து திரையுலகில் நுழைந்த திரு.கமலஹாசன் தனது 58 ஆண்டு கால திரையுலக வரலாற்றில் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிக்கு வழியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்.

நடிகராக, பாடகராக, நடனக் கலைஞராக, கதை வசன கர்த்தாவாக, கவிதை எழுதுபவராக, இயக்குநராக, தயாரிப்பாளராக சினிமாத்துறையின் அனைத்து துறைகளிலும் கற்றுத் தேர்ந்து வெற்றியைப் பெற்றவர்.


படத்துக்கு படம் கதைக் கேற்றார்போல் தன்னுடைய உடலை வருத்திக் கொள்வதில் கமலின் நடிப்புக்கு இணை கமல்தான். அவரின் கடுமையான உழைப்புக்கு கிடைத்ததுதான் செவாலியே விருது.

# மனித தலைக்கு மதிப்பில்லை...!

மன்னர் அசோகர் வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வயோதிக புத்த பிக்ஷு மன்னரும் அவரது ஆட்களும் செல்ல வழிவிட்டு, ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றார். அசோகச் சக்கரவர்த்தி அவரைப் பார்த்து விட்டார். உடனே தமது ரதத்தை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று புத்த பிக்ஷுவின் காலில் நெடுஞ்சாண கிடையாக விழுந்தார். அவரது சிரம் துறவியின் காலில் பட்டது. துறவி தமது கைகளை உயர்த்தி மன்னனை ஆசிர்வதித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் சங்கடப்பட்டார்.”ஒரு மண்டலாதிபதி ஒரு பரதேசியின் காலில் விழுவதா? அரச பாரம்பாரியக் கவுரவம் என்னாவது?’ என்ற எண்ணம் அவரை அலைக் கழித்தது. அரண்மனைக்கு சென்றதும் அரசரிடம் தமது வருத்தத்தை வெளிப்படுத்தினார். அமைச்சரின் பேச்சைக் கேட்ட அசோக மன்னர் சிரித்தார். அமைச்சரின் கேள்விக்குப் பதிலளிக்காமல், ஒரு விசித்திர கட்டளையைப் பிறப்பித்தார்.””ஒரு ஆட்டுத் தலை, ஒரு புலித்தலை, ஒரு மனிதத் தலை, மூன்றும் எனக்கு உடனே வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே,” என்றார்.



மன்னரின் கட்டளை அமைச்சரைத் திகைக்க வைத்தது. எனினும் அரச கட்டளையாயிற்றே! அதை நிறைவேற்ற ஏவலர்கள் நாலாபக்கமும் பறந்தனர்.



ஆட்டுத்தலை கிடைப்பதற்கு அதிகச் சிரமம் இருக்கவில்லை. ஓர் இறைச்சிக் கடையில் அது கிடைத்து விட்டது. புலித் தலைக்கு அலைந்தனர். அது ஒரு வேட்டைக்காரனிடம் கிடைத்தது. அன்றுதான் அவன் ஒரு புலியை வேட்டையாடியிருந்தான். மனிதத் தலைக்கு எங்கே போவது? கடைசியில் சுடுகாட்டிற்குச் சென்று ஒரு பிணத்தின் தலையை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தனர் மூன்றையும் பார்த்த அசோக மன்னர் தன் அமைச்சரிடம், “”இம்மூன்றையும் சந்தையில் விற்றுப்பொருள் கொண்டு வாருங்கள்.'' என்றார். மன்னரின் கட்டளைப்படி சந்தைக்குச் சென்றவன் திணறினான்.

ஆட்டுத் தலை அதிகச் சிரமமின்றி விலை போனது.



புலியின் தலையை வாங்க ஆளில்லை. பலர் அதை

வேடிக்கைத் தான் பார்த்தனர். கடைசியில் ஒரு வேட்டைப் பிரியரான பிரபு அதனை வாங்கித் தன் வீட்டில் அலங்காரமாக மாட்டி வைக்க எடுத்துப் போனான். மீதமிருந்த மனிதத் தலையைப் பார்த்த கூட்டம் அருவருப்புடன் அரண்டு மிரண்டு பின் வாங்கியது. ஒரு காசுக்கு கூட அதை வாங்க யாரும் முன்வரவில்லை. அரண்மனை திரும்பிய அமைச்சர் ஆட்டுத் தலை உடனே விலை போனதையும், புலித்தலை சற்றுச் சிரமத்துடன் விலை போனதையும் மனிதத் தலையை வாங்க ஆளில்லை என்பதையும் தெரிவித்தார்.

“”அப்படியானால் அதை யாருக்காவது இலவசமாகக் கொடுத்து விடுங்கள்!'' என்றார் அசோகர். இலவசமாகக் கூட அதனை வாங்கிக் கொள்ள யாருமே முன்வரவில்லை. இப்போது அசோக மன்னர் கூறினார்...

“”பார்த்தீரா அமைச்சரே! மனிதனின் உயிர் போய்விட்டால், இந்த உடம்பு கால் காசு கூடப் பெறாது.

இலவசமாகக் கூட இதனை யாரும் தொடமாட்டார்கள். இருந்தும் இந்த உடம்பு உயிர் உள்ள போது என்ன ஆட்டம் ஆடுகிறது! செத்த பின்பு நமக்கு மதிப்பில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், உடலில் உயிர் இருக்கும்போது, தம்மிடம் எதுவும் இல்லை என்று உணர்ந்தவர்கள் தான் ஞானிகள். அத்தகைய ஞானிகளை விழுந்து வணங்குவதில் என்ன தவறு? சொல்லப்போனால் அதுதான் ஞான வாயிலின் முதல் படி!'' என்றார். தன் தவறை உணர்ந்தார் அமைச்சர்..

**பணிந்தவர்களும், துணிந்தவர்களும் வாழ்வில் தோற்றதாக சரித்திரம் இல்லை.**


## மித்ரா டைம்ஸ் மாத இதழ்

ஆண்டு சந்தா ₹ 240/-

## சந்தா படிவம்










பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

..............................

மாநிலம் : ..............................

தொலைபேசி : ..............................

கைபேசி : ..............................

மின்னஞ்சல் : ..............................

காசோலை - டி.டி. விவரம்

எண் : ..............................

வங்கி : .............................. தேதி : ..............

தொகை : ..............................

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**மித்ரா டைம்ஸ் மாத இதழ்**

**#602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094. போன்: 044--23744662, 23743007/8**

# மித்ரா சினி கோலிவுட்



தொடர்ந்து புதுமையான வேடங்களை எற்று நடிப்பவர் சியான் விக்ரம். அதற்காக தனது உடலை கதைக்கேற்றாற்போல் வருத்திக் கொண்டு மேக்கப் செய்து கொள்வது விக்ரம் வெற்றி பெறுவதன் இரகசியம் ஆகும்.

காசி, அந்நியன், ஐ, போன்ற படங்களின் வரிசையில் இப்போது இருமுகன் என்ற படம் வெளிவர உள்ளது. மகளின் திருமணத்தை நடத்த இருக்கும் விக்ரம் நாயகனாக இந்தப் படத்தில் கலக்குகிறார்.



பூவரசம்பூ பூத்தாச்சி பொண்ணுக்கு சேதியும் வந்தாச்சி.... என்று "கிழக்கே போகும் ரயில்" படத்தின் மூலம் 1978-ல் அறிமுகமானர் ராதிகா. அடுத்தடுத்து ஹிட் படங்களின் மூலம் முன்னணி நடிகையாக மாறியவர். இதுவரை 200-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துவிட்டார். தவிர சித்தி, அரசி என்று ஹிட் சீரியல்கள். இன்று வரையிலும் வெள்ளித்திரை மற்றும் சின்னத்திரையில் கலக்கிவருகிறார். அவர் நடிப்புலகிற்கு வந்து 38 வருடங்கள் ஆகிவிட்டனவாம்.

**வாழ்த்துக்கள்...**



**லேடி சூப்பர் ஸ்டார் :** நயன்தாராவிற்கு தயாரிப் பாளர்கள் போட்டி போட்டு காத்திருக்கின்றனர்.

ஆனால் இவரை ஹைதரா பாத்திலுள்ள எந்த ஹோட்டலிலும் தங்குவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று கூறிவருகிறார்கள் ஹோட்டல் நிர்வாகிகள். ஏனென்று விசாரித்தால், ஹோட்டலில் தங்கும் போது, திருப்தியாக இல்லையென்றால் கையில் கிடைப்பதையெல்லாம் எடுத்து போட்டு உடைக்கிறாராம் நயன்தாரா. அதிகமாக கோவப் பட்டுப் பேசுவதாகவும் புகார் கூறுவதாக சொல்லப்படுகிறது.

**காதுமா வாட் ஹாப்பண்ட்?**



சிவகார்த்திகேயனுடன் தொடர்ந்து ஸ்ரீதிவ்யா தொடர்ந்து நடித்து வந்தார். கீர்த்தி சுரேஷ் வருகையால் அவருக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சிவகார்த்திகேயன் நடித்துவரும் ரெமோ படத்தில் கீர்த்தி சுரேஷ் ஹீரோயினாக நடித்து வருகிறார். இந்நிலையில் ரெமோ படத்தில், ஒரு பாடல் காட்சியில் மட்டுமாவது தான் நடிக்க வேண்டும் என்று, சிவகார்த்திகேயனிடம் ஸ்ரீதிவ்யா கேட்டுக்கொண்டு, காரியத்தை சாதித்துள்ளதாக கோலிவுட் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இதனால் கீர்த்தி சுரேஷ் கோபத்தில் உள்ளார்.**



## சிவகார்த்திகேயனுடன் நடிக்கத்துடிக்கும் ஸ்ரீதிவ்யா

## கோபத்தில் கீர்த்தி சுரேஷ்

**ரெமோ-வை, அக்டோபர் 7ம் தேதி ரிலீஸ் செய்வதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறி வித்துள்ளது. இதே நாளில் ஜீவா, காஜல் நடிக்கும் கவலைவேண்டாம் படமும் வெளியாகவிருக்கிறது. இரண்டு படங்கள் மட்டுமே ரிலீஸ் என்றால், தியேட்டர்கள் சரிசமமாக பங்காகும் என்று நினைத்துக்கொண்டனர் இரு படக்குழுவினரும். ஆனால் அதே நாளில் விஷால் நடிக்கும் கத்திசண்டை, ஜெயம்ரவியின் போகன் படமும் ரிலீஸாக வாய்ப்பிருப்பதாக சொல்லப்படுகிறது. இதனால் தியேட்டர் எண்ணிக்கை குறையலாம், வசூலும் குறைய வாய்ப்பிருக்கிறது என்று ரெமோ படக்குழு தீவிர யோசனையில் இருக்கிறார்களாம்.**






நடிகர் சங்க பொதுச் செயலாளர் விஷாலும் நடிகர் சங்க முன்னாள் தலைவர் சரத்குமாரின் மகள் வரலட்சுமியும் காதலித்து வருவதாக கிசுகிசுக்கப்பட்டு வருகிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் விஷால். நானும், வரலட்சுமியும் பள்ளியிலிருந்தே நண்பர்கள். அதன் பிறகு இப்போது காதலர்களாக மாறிவிட்டோம். எங்களது திருமணம் நடிகர் சங்கத்தால் கட்டப்படும் கட்டிடத்தில் நடக்கும். திருமணத்திற்கான தேதியையும் இப்போதே கார்த்தியிடம் சொல்லிவிட்டேன் என்று கூறியுள்ளார்.

**வாழ்க வளமுடன்...!**

**சிந்திக்க...!**

உன் தகுதி பிறருக்குத் தெரியவேண்டுமானால் பிறர் தகுதியை நீ தெரிந்துகொள்.



# தஞ்சை கபாலி



**எஸ்.ஏ.** கணபதி தமிழ்நாடு, தஞ்சாவூர், தம்பிக்கோட்டை கிராமத்தில் 1912ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையாரின் பெயர் ஆறுமுக தேவர். தாயாரின் பெயர் வைரம்மாள். எஸ். ஏ. கணபதிக்கு பத்து வயதாக இருக்கும் போது சிங்கப்பூருக்கு வந்தார். தம் தொடக்கக் கல்வியை சிங்கப்பூரில் பெற்றார். இளம் வயதிலேயே அரசியலிலும் தீவிர ஈடுபாடு காட்டினார்.

ஜப்பானியர் காலத்தின் போதுதான் இந்திய தேசிய விடுதலைக்காக நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் மலாயாவுக்கு வந்து இந்திய தேசிய ராணுவத்தை அமைத்தார். அப்போது சிங்கப்பூரில் இயங்கி வந்த ஆசாத் ஹிந்த் சர்க்கார் தற்காலிக சுதந்திர அரசாங்கத்தைஇந்திய தேசிய ராணுவத்தினர் (Indian National Army) நடத்தி வந்தனர்.

அதில் எஸ். ஏ. கணபதி ஓர் அதிகாரியாகவும் பயிற்றுநராகவும் சேவை செய்தார். மேலும் மலாயா கம்யூனிஸ்டு கட்சியின் Malaya Communist Party (MCP) கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த “முன்னணி” இதழின் ஆசிரியராகவும் பணி புரிந்தார். இந்தக் கட்டத்தில் அகில மலாயா பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

அகில மலாயா தொழிலாளர் சம்மேளனம்

இந்தச் சங்கம் பின்னர் அகில மலாயா தொழிலாளர் சம்மேளனம் என பெயர் மாற்றம் கண்டது.

எஸ்.ஏ. கணபதியினால் வழிநடத்தப்பட்ட அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனம் மலாயாவின் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளுக்காகவும், மலாயாவின் அரசியல் விடுதலைக்காகவும் பெரும் போராட்டங்களை நடத்தியது. எஸ். ஏ. கணபதி ஊக்கமுடையவராகவும், செயல்பாட்டுத் திறன் மிக்கவராகவும் இருந்தார். இந்தப் பண்புகளே அவரை மலாயாவின் வலிமை மிக்க அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமைத்துவத்திற்கு கொண்டு சென்றது.

மலாயா ரப்பர் தோட்டங்களில் சீனத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 60 காசில் இருந்து 70 காசு வரை கொடுக்கத் தோட்ட நிர்வாகங்கள் முன் வந்தன. சீனத் தொழிலாளர்களுக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்கும் இடையிலேயே பாரபட்சம் காட்டப்பட்டது. ஒரே அளவுள்ள வேலை. ஆனால், ஏற்றத் தாழ்வான சம்பள முறையால் இந்தியர்களுக்கு 50 காசு மேல் சம்பளம் தர மறுத்தனர்.(கபாலியில் இடம் பெற்ற காட்சி) அப்போதே 10 காசு சம்பள உயர்வு கோரிப் போராடினர் . இது நடந்தது 1940ல்

அப்போதைய தோட்ட நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது. நிர்வாகத்தினரின் அனுமதி இல்லாமல் தொழிலாளர்களின் நண்பர்கள், உறவினர்கள் தோட்டத்திற்குள் வருகை தரக்கூடாது. நிர்வாக அதிகாரிகளுக்கு எதிரில் மிதிவண்டியில் போகக்கூடாது எனும் அடிமைத்தனமான கட்டுப்பாடுகள். இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும்; சம்பளத்தில் 10 காசு உயர்த்தி 60 காசாகத் தர வேண்டும் என்று போராட்டத்தில் இறங்கினார்.

எஸ். ஏ. கணபதி இளம் வயதிலேயே மலாயா தொழிற் சங்க இயக்கத்தின் தேசிய தலைவரானார். அவரின் சாதனை இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் கவனத்தையே ஈர்த்தது. எஸ். ஏ. கணபதியின் உரிமைப் போராட்டங்கள் பிரித்தானியர்களின் நலன்களுக்குப் பெரும் இடையூறுகளாக அமைந்தன. அவரை அனைத்துலகப் பார்வையில் இருந்து அகற்றுவதற்கு பிரித்தானியர்கள் முடிவு செய்தனர்.

சிலாங்கூர் மாநிலத்தில் ரவாங், பத்து ஆராங் என இரு நகரங்கள் உள்ளன. இந்த நகரங்களுக்கு மத்தியில் வாட்டர்பால் தோட்டம் (Waterfall Estate) இருக்கிறது. அங்கே கணபதி கைது செய்யப்பட்டார். கைத்துப்பாக்கியும் துப்பாக்கி குண்டுகளும் வைத்திருந்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

உடனடியாக, அவர் அங்கிருந்து கோலாலம்பூருக்கு கொண்டு வரப்பட்டார். அவரைக் காப்பாற்ற ஜவஹர்லால் நேரு புதுடில்லியில் இருந்து பல முயற்சிகளை மேற்கொண்டார்.

நேருவின் நண்பர் வி. கே. கே. கிருஷ்ண மேனன் லண்டனில் முயற்சிகளை மேற்கொண்டார். இருப்பினும் இந்தியாவின் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. விசாரணை செய்யப்பட்டு இரண்டே மாதங்களில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு எஸ். ஏ. கணபதி கோலாலம்பூர், புடு சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.





# கன்னிகாதானம்

வயிற்றுப்பசியைப் போக்குகிற அன்னதானமே சிறந்தது என்று சொல்வார்கள். நிதானமே சிறந்தது என்பவர்களும் உண்டு. ஆனால், தானங்களிலேயே மிகப் பெரியதாக, மகா தானமாக சாஸ்திரம் குறிப்பிடுவது கன்னிகாதானத்தைதான்!

திருமணம் செய்துவைக்கும்போது, தந்தையானவர் தான் பெற்ற பெண்ணை மற்றொரு குடும்பத்தில் பிறந்த ஆண்மகனுக்கு தானமாக அளித்து அவனிடம் ஒப்படைக்கும் இந்த நிகழ்வையே கன்யாதானம் அல்லது கன்னிகாதானம் என்கிறார்கள்!

இந்த உலகில் பலவித தானங்கள் செய்யப்பட்டாலும் அவை எல்லாவற்றிலும் உயர்ந்தது இந்த கன்னிகாதானமே என்பதற்கு இந்த நிகழ்வின்போது சொல்லப்படுகிற சங்கல்பமும், மந்திரமுமே சாட்சி. ‘தசானாம்பூர்வேஷாம், தசானாம்பரேஷாம்,

மம ஆத்மனஸ்ச ஏகவிம்சதிகுல உத்தாரண..’ என்று அந்த மந்திரம் நீள்கிறது.

அதாவது, கன்யாதானம் செய்பவனுக்கு முன்னால் உள்ள பத்து தலைமுறையும், பின்னால் வருகிற பத்து தலைமுறையும், கன்யாதானம் செய்பவனயும் சேர்த்து ஆகமொத்தம் இருபத்தியோரு தலைமுறைகளையும் கரைசேர்க்கும் விதமாக இந்த கன்னிகாதானம் என்று அழைக்கப்படுகிற மகாதானத்தைச் செய்கிறேன் என்பது இந்த மந்திரத்தின் பொருள்.

உன் வம்சவிருத்திக்காக எம் குலவிளக்கை உனக்கு தானமாக அளிக்கிறேன் என்று ஒரு தந்தை செய்யக்கூடிய கன்னிகாதானமே உலகில் அளிக்கப்படுகின்ற தானங்களில் மிகப்பெரியது என்று சாஸ்திரம் போற்றுகிறது.

ஆண்பிள்ளையைப் பெற்றால் அந்தப் பிள்ளை செய்கிற கர்மாவின் மூலம் அந்த ஒரு தலைமுறை மட்டுமே கரையேறும். ஆனால், பெண்பிள்ளையைப் பெற்று, அவளைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து, மற்றொருவனின் வம்சவிருத்திக்காக அவளை தானம் செய்து கொடுப்பதால், அவனது வம்சத்தில் 21 தலைமுறைகளும் கரையேறுகிறது என்றால் பெண்பிள்ளையைப் பெற்றவன் எப்பேர்ப்பட்ட புண்ணியம் செய்தவன் என சிலாகிக்கிறார்கள் சான்றோர்கள்! ஆக, பெண்பிள்ளையைப் பெற்றவன், இருபத்தியோரு தலைமுறையைக் கரையேற்றும் வாய்ப்பைப் பெற்றவன் என சாஸ்திரம் உணர்த்துகிறது.

# கல்வியில் சிறந்து விளங்க ...

என்னைப் போன்ற பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் தினந்தோறும் காலை, மாலை இருவேளையும் பூஜையறையில் தீபத்தை ஏற்றி வைத்து பாட வேண்டிய பதிகம்.



**எஸ். சூர்யா**
STD VII-B
SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL
CHENNAI






சுற்றமொடு பற்று அவை துயக்குஅற அறுத்துக்
குற்றம் இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்று அவரை வானவர்தம் வான்உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே

வண்டு அணைசெய் கொன்றைஅது வார்சடைகள் மேலே
கொண்டு அணைசெய் கோலம்அது கோள்அரவினோடும்
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர ஓர் அம்பால்
கண்டவன் இருப்பது கருப்பறிய லூரே

வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல்ஆக
போதினோடு போதுமலர் கொண்டு புனைகின்ற
நாதன்என நள்இருள்முன் ஆடுகுழை தாழும்
காதவன் இருப்பது கருப்பறிய லூரே

மடம்படு மலைக்கு இறைவன் மங்கைஒரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந்து அணவு காலன் உயிர் காலஒரு காலால்
கடந்தவன் இருப்பது கருப்பறிய லூரே

ஒருத்தி உமை யோடும் ஒருபாகம் அதுவாய
நிருத்தன் அவன் நீதிஅவன் நித்தன் நெறிஆய
விருத்தன் அவன் வேதம்என அங்கம் அவை ஓதும்
கருத்தவன் இருப்பது கருப்பறிய லூரே

விண்ணவர்கள், வெற்பு அரசு பெற்ற மகள் மெய்த்தேன்
பண் அமரும் மென்மொழியினாளை அணைவிப்பான்
எண்ணி வரும் காமன்உடல் வேவ எரிகாலும்
கண்ணவன் இருப்பது கருப்பறிய லூரே

ஆதி அடியைப் பணிய அப்போடு மலர்ச்சேர்
சோதி ஒளி நல்புகை வளர்க்கு வடுபுக்குத்
தீதுசெய வந்துஅணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறிய லூரே

வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர்செயும் தொழில் இலங்கை நகர்வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்றுவிழ மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது கருப்பறிய லூரே

பரந்து அது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்துஓர் சடைமேல்மிசை உகந்து அவளை வைத்து
நிரந்தர நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது கருப்பறிய லூரே

அற்றம் மறையா அமணர் ஆதம் இலி புத்தர்
சொற்றம் அறியாதவர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்று என இருப்பது கருப்பறிய லூரே

**நலம்தரு புனல்கலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேய கடவுள்களைப்
பலம்தரு தமிழ்க்கிளவி பத்தும் இவை கற்று
வலம் தரும் அவர்க்கு வினைவாடல் எளிது ஆமே**

திருச்சிற்றம்பலம்





**அம்மாவின் ஆசியுடன் நடைபெற்ற ஆறுக்குட்டி எம்.எல்.ஏ. இல்லத் திருமணம்**

21-08-2016 அன்று கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் மகன் அசோக்குமார்-விஷ்ணுப்பிரியா திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்குபெற்ற மிக பிரம்மாண்டமான நிகழ்ச்சியில் பங்குபெற்ற மித்ரா டைம்ஸ் எம்.எஸ். மூர்த்தி, சன் டி.வி. ஆடம்ஸ், வித்யா விகாஸ் பள்ளி சேர்மன் குணசேசகரன், வித்யா விகாஸ் பள்ளி இயக்குநர்.அழகர் மற்றும் தொழிலதிபர்கள், திரைப்படத்துறையினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# முதலமைச்சரிடம் விருது பெற்ற மேயர்



தமிழகத்தின் 12 மாநகராட்சிகளில் சிறந்த மாநகராட்சி என்று திண்டுக்கல் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. 70-வது தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மேயர் மருதராஜ் , மாநகர் கமிஷனர் மனோகர் ஆகியோரிடம் சிறந்த மாநகராட்சிக்கான விருது மற்றும் சான்றிதழ் வழங்கினார் முதல்வர் ஜெயலலிதா. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்புதான் திண்டுக்கல் நகராட்சி, மாநகராட்சி ஆனது என்பது குறிப்பிடத்தக்கது.

**– திண்டுக்கல் முபாரக்**

# பொருளை பாதுகாக்க டாட்டா தரும் அட்வைஸ்...!



நண்பருடன் JRD டாட்டா

JRD டாட்டா

“உனக்கு எத்தனை போன, பென்சில் வாங்கி கொடுத்தாலும் அத தொலச்சிட்டு வரதே வேலயா போச்சு” என்று தன் பிள்ளைகளிடம் கண்டிப்பு காட்டும் பெற்றோர்களின் குரல்கள் கேட்காத வீடுகளே இல்லை.

பிள்ளைகள் மட்டுமல்ல பெரியவர்களும் அப்படிதான். விலையுயர்ந்த பேனாவை வாங்கி பையில் வைத்திருப்போம். பேருந்து, வங்கி போன்ற பொது இடங்களில் “சார், பேனா கொடுங்கள் என்று ஒருவர் கேட்பார். நாமும் புத்திசாலினு நெனச்சு பேனா மூடியை மட்டும் வைத்துக்கொண்டு அடிபகுதியைத் தருவோம். இப்படி மூடி மட்டுமே 10-க்கு மேல இருக்கும். ஒன்று அடுத்துவர் பேனாவை நாம ஆட்டைய போட்டுடாருனும் சொல்லலாம்... இல்ல நாம மறந்துட்டு வாங்காம போயிருப்போம்.. இப்படி ஒரு சம்பவம் தொழிலதிபர் நண்பரின் வாழ்க்கையில் அடிக்கடி நடக்கும்

JRD டாட்டாவுக்கு நண்பர் ஒருவர் இருந்தார். அவர் பேனா வைக்கும் இடத்தை அடிக்கடி மறந்து விடுவார். இதனால் விலை மலிவாக நிறைய பேனா வாங்கி, தொலைத்து விடுவார். இந்த கவனக் குறைவை நினைத்து மிகவும் மனம் வருந்தினார்.

அப்போது டாட்டா தன் நண்பருக்கு ஒரு ஆலோசனை வழங்கினார். மிகவும் விலை உயர்ந்த பேனா ஒன்று வாங்க சொன்னார். அதன் படியே 22 காரட் தங்கத்தால் ஆன பேனா ஒன்றை வாங்கினார்.

பிறகு 6 மாதம் கழித்து டாட்டா அந்த நண்பரை சந்தித்தார். பேனா மறதியை பற்றி விசாரித்தார். அந்த தங்க பேனாவை தான் மிகவும் கவனமாக வைத்துக் கொள்வதாகவும், முன்பு இருந்ததை விட தன்னுடைய செயல்பாடுகளில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும் தெரிவித்தார்.



இதுதான் நம்முடைய வாழ்க்கையிலும் நடந்து கொண்டிருக்கிறது நண்பர்களே. நாம் மதிப்பாக உணரும் ஒவ்வொன்றையும் கவனத்துடன் பார்த்துக்கொள்கிறோம்!

1. உடலை மதிப்பாக உணர்ந்தால், சாப்பிடுவதில் கவனம் செலுத்துவோம்.*
2. நண்பனை மதிப்பாக உணர்ந்தால், மரியாதை கொடுப்போம்.*
3. பணத்தை மதிப்பாக உணர்ந்தால், அவசிய செலவுகள் செய்வோம்.*
4. உறவுகளை மதிப்பாக உணர்ந்தால், முறிக்க மாட்டோம்.*
5. வியாபாரத்தை மதிப்பாக உணர்ந்தால், அர்ப்பணிப்புடன் செய்வோம்.*
6. வாழ்க்கையை மதிப்பாக உணர்ந்தால், உயர்ந்த நோக்கத்துடன் வாழ்வோம்.

மதிப்பில்லாமல் செய்யப்படும் எந்த ஒரு செயலும் வெற்றி பெறுவதில்லை.

**உடலினை உறுதி செய்.**

அதிக புரோட்டின் கொண்ட முட்டையை காலை உணவில் சேர்த்துக் கொள்வதால் நாள் முழுவதும் பசி குறைந்து கலோரி சேர்வது தவிர்க்கப்படும். அதனால், உடல் எடையைக் குறைக்க முடியும்.





# இந்திய மாநிலங்களின் பெயர் காரணங்களை தெரிந்து கொள்வோம்!

**ஆந்திர பிரதேசம்.**
தெற்கு பிராந்தியம். சமஸ்கிருதத்தில் “ஆந்த்ரா” என்றால் தெற்கு என்று பொருள்.

**அருணாச்சல பிரதேசம்**
முதல்ஒளி மலைகள் பிராந்தியம். சமஸ்கிருதத்தில் “அருணா” என்றால் “முதல்ஒளி” அல்லது “மூலஒளி” என்று பொருள். இந்தியாவல் முதல் சூர்ய உதயம் இங்கு நடைபெருவதால் இப்பெயர் ஏற்பட்டது.

**அஸ்ஸாம்**
நிலையற்ற சமஸ்கிருதத்தில் “அஸமா” என்றால் “நிலையற்ற” என்று பொருள்.

**பீகார்**
புத்தமடலாயம் சமஸ்கிருதத்தில் “விகார்” என்றால் “ புத்தர் கோவில்” என்று பொருள். பிராகிருதத்தில் பீகார்.

**சத்திஸ்கர்**
36 கோட்டைகள். ஹிந்தியில் சத்திஸ் என்றால் 36.

**கோவா**
பசு மந்தை சமஸ்கிருதத்தில் “கோ” என்றால் “பசு”.

**குஜராத்**
குஜ்ஜார் இன மக்களின் நிலம். 7ம் நூற்றாண்டில் குஜ்ஜார் மக்கள் இப்பகுதியை ஆண்டதால் இப்பெயர் ஏற்பட்டது. குஜ்ஜார் அல்லது கூர்ஜர என்றும் அழைக்கப்பட்டது.

**ஹரியானா**
விஷ்ணுபகவான் வந்த இடம். மகாபாரத போர் நடந்த குருக்ஷேத்திரம் உள்ள பகுதி. அங்கு கிருஷ்ணர் வந்ததால் இப்பெயர் ஏற்பட்டது.

**ஹிமாச்சல் பிரதேசம்**
பனிமலை பிராந்தியம்.

**ஜம்மு – காஸ்மீர்**
ராஜா ஜம்பு லோசன் ஆண்ட பகுதி ஜம்மு காஸ்யப ரிஷி வாழ்ந்த பகுதி என்பதால் காஸ்யப என்று அழைத்தனர். உருதுவில் காஸ்மிர் என்றனர்.

**ஜார்கண்ட்**
வனம் நிறைந்த மலைகள்.
ஜார் வனம் கண்ட் மலைகள்

**கர்நாடகா**
உயர்நில நாடு

**கேரளா**
சேர்க்கப்பட்ட நாடு. பரசுராமர் அம்பு எய்து கடலை வற்றச்செய்து உருவாக்கப்பட்டதால் இப்பெயர் ஏற்பட்டது.

**மத்திய பிரதேசம்**
மத்திய அல்லது நடுவண் பிராந்தியம்.

**மகாராஷ்ட்ரா**
சிறந்த(அ)பெரிய நாடு.

**மணிப்பூர்**
நகை(அ)ஆபரணங்களின் நிலம்.

**மேகலாயா**
மேகங்களின் நிலம்.

**மிஸோரம்**
உயர்நிலத்தில் வாழும் மக்களின் பகுதி.

**நாகலாந்து**
நாகர் இன மக்களின் நிலம்.

**ஒடிசா(அ)ஒரிசா**
ஓட்ர இன மக்களின் நாடு.

**பஞ்சாப்**
ஐந்து நதிகள்

**ராஜஸ்தான்**
ராஜபுத்திர இன மக்களின் இடம்.

**சிக்கிம்**
புதிய அரண்மனை. திபெத்திய மொழியில் “சு” என்றால் “புதிய” என்றும் “க்யிம்“ என்றால் அரண்மனை.

**தமிழ்நாடு**
தமிழர்களின் நாடு.

**தெலுங்கானா**
தெலுங்கர்களின் இடம்.

**திரிபுரா**
திரிபுர சுந்தரி என்னும் கடவுளின் பெயரால் ஏற்பட்டது. மற்றும் மூன்று நாடுகளுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளதால்.

**உத்தர பிரதேசம்**
வடக்கு பிராந்தியம்.

**உத்திரகண்ட்**
வடக்கு மலைகள்.

**மேற்கு வங்கம்**
வங்க இன மக்களின் இடம்.

மருத்துவம்

# நஞ்சற்ற உணவே நோயற்ற வாழ்வு

## வெந்தயக் கீரை

வயிற்று போக்கைக் குணப்படுத்தும். தாய்ப்பாலை பெருக்கும். தீப்புண்ணை ஆற்றும். மதுமேகத்தை குணமாக்கும் உடலில் ஏற்படும் கட்டிகளை பழுத்து உடையச் செய்யும். வலியை போக்கும். சர்க்கரை வியாதியைக் குறைக்கும்.

மேலும் தொடர்ந்து வெந்தயத்தை சாப்பிட்டால் கருத்தரிப்பது தடைபடும். முடி உதிர்வதைத் தடுக்க வெந்தயத்தை சீயக்காயோ சேர்த்து அரைத்து தலைக்கு பூசி ஊற வைத்து தலை முழுகினால் பலன் கிடைக்கும்.



முகப்பரு வந்தால் வெந்தயத்தை நன்கு அரைத்து முகத்தில் அப்பினால் எரிச்சல் குறையும்.

## வெட்டி வேர்



குளிர்ச்சியைத் தருவதுடன் நல்ல நறுமணத்தையும் உற்சாகத்தையும் தரக்கூடியது. இதிலிருந்து எடுக்கப்படும் தைலம் நறுமணம் கொண்டது.

வெட்டிவேர் எண்ணையை கை, கால் பிடிப்புகளுக்கு தடவி வர குணம் பெறும். மேலும் காய்ச்சல் மற்றும் வயிற்றில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தும். நாவறட்சி, தாகம் போக்கும் மன மழ்ச்சி உண்டாக்கும். வாந்தி பேதிக்கும் இது நல்ல மருந்தாகும். இதனை பொடி செய்தும் பயன்படுத்தலாம்.

## வேலிப் பருத்தி



வயிற்று போக்கைக் குணப்படுத்தும். தாய்ப்பாலை பெருக்கும். தீப்புண்ணை ஆற்றும்.

மதுமேகத்தை குணமாக்கும் உடலில் ஏற்படும் கட்டிகளை பழுத்து உடையச் செய்யும். மேலும் தொடர்ந்து வெந்தயத்தை சாப்பிட்டால் கருத்தரிப்பது தடைபடும். முடி உதிர்வதைத் தடுக்க வெந்தயத்தை சீயக்காயோடு சேர்த்து அரைத்து தலைக்கு பூசி ஊற வைத்து தலை முழுகினால் பலன் கிடைக்கும். முகப்பரு வந்தால் வெந்தயத்தை நன்கு அரைத்து முகத்தில் அப்பினால் எரிச்சல் குறையும்.

## வேம்பு

வேம்பு கோழைய கற்றுதல், சிறுநீர் பெருக்குதல், வீக்கம், கட்டிகளைக் கரைத்தல் போன்ற குணமுடையது. வாதம், மஞ்சள் காமாலை, காய்ச்சல், சுவையின்மை, பித்தம், கபம், நீரழிவு, தோல் வியாதிகளை போக்கும். பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுகிறது. வேப்பங்கொழுந்தும் அதிமதுரப் பொடியும் சமன் சேர்த்து நீர்விட்டு அரைத்துப் பட்டாணி அளவாய் மாத்திரை செய்து நிழலில் உயர்த்தி நாள்தோறும் 3 வேளை ஒரிரு மாத்திரை கொடுத்து வர அம்மை நோய் தணியும்.

50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முதிர்ந்த வேம்பின் வேர்ப்பட்டைப் பொடியுடன் முதிர்ந்த பூவரசன் பட்டையின் பொடி கலந்து 2 கிராம் அளவாக சிறிது சர்க்கரை கூட்டி காலை, மாலை நீண்ட நாட்கள் சாப்பிட்டு வர தொழுநோய் முதலான அனைத்து தோல் நோய்களும் குணமாகும்.





# அன்றாட வாழ்வில் குமரியின் பயன்கள்

சோற்றுக் கற்றாழை சோறை எடுத்து எண்ணெயில் இட்டு காய்ச்சித் தலைமுழுகி வர மயிர் வளர்வதுடன் சுகநித்திரையும் உண்டாகும்.

சிற்றாமணக்கெண்ணெயுடன் கற்றாழை சோறு ஊறு வைத்து அரைத்த வெந்தயம் அரிந்த வெள்ளை வெங்காயம் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டி காலை அல்லது இரவு படுக்கைக்கு போகுமுன்னராகிலும் ஓர் கரண்டி சாப்பிட்டு வர உடற்சூடு நீங்கும். உடல் பெருகும். மேகஅனல் மாறும்.

இத்தகைய கற்றாழை இளம் தலைமுறையின் இனிய தோழி தானே! வீட்டிற்கொரு கற்றாழை வளர்ப்போம்.

சோற்றுக் கற்றாழை வேர்களை வெட்டி, சிறிய துண்டுகளாகச் செய்து சுத்தம் செய்து, இட்லிப் பானையில் பால்விட்டு வேர்களைத் தட்டில் வைத்துப் பால் ஆவியில் வேகவைத்து எடுத்து, நன்கு காயவைத்துப் பொடி செய்து வைத்து கொண்டு, தினசரி ஒரு தேக்கரண்டி பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால், தாம்பத்திய உறவு மேம்படும். தாம்பத்திய உறவுக்கு நிகரற்ற மருந்தாகும்.

சதைப்பிடிப்புள்ள மூன்று கற்றாழையின் சதைப் பகுதியச் சேகரித்து ஒரு பாத்திரத்தில் வைத்து, இதில் சிறிது படிக்காரத் தூளைத் தூவி வத்திருந்தால், சோற்றுப் பகுதியில் உள்ள சதையின் நீர் பிரிந்து விடும். இந்த நீருக்குச் சமமாக நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் கலந்து நீர் சுண்டக் காய்ச்சி எடுத்து வைத்துக்கொண்டு, தினசரி தலைக்குத் தடவி வந்தால் கூந்தல் நன்றாக வளரும். நல்ல தூக்கம் வரும்.

கண்களில் அடிபட்டதாலோ, இதர காரணங்களாலோ கண் சிவந்திருந்தால் கற்றாழைச் சோற்றை வைத்துக் கட்டி இரவு தூங்கினால் வேதனை குறையும். மூன்று தினங்களில் நோய் குணமாகும். கற்றாழைச் சோற்றில் சிறிது படிக்காரத்தூள் சேர்த்து, ஒரு துணியில் முடிச்சுக் கட்டி, தொங்க விட்டு ஒரு பாத்திரத்தை வைத்து நீர்சொட்டுவதைச் சேகரம் செயது; எடுத்துக்கொண்டு, இதைச் சொட்டு மருந்தாக கண்களில் விட்டு வந்தால், கண்நோய்கள், கண்களில் அரிப்பு, கண் சிவப்பு மாறும்.

குளிர்ச்சி தரும் குளியலுக்கு

மூலிகைக் குளியல் எண்ணெய் தயாரிக்க, சோற்றுக் கற்றாழை சோற்றுப் பகுதியை அரக்கிலோ தயாரித் ஒரு கிலோ நல்லெண்ணெய் சேர்த்து கடும்

கற்றாழையின் மற்றொரு பெயர் குமரி



வெயிலில் 30 தினங்கள் வைத்து எடுத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். எண்ணெய் பசுமை நிறமாக மாறிவிடும். இதில் தேவையான வாசனையக் கலந்து வைத்துக் கொண்டு, குளியலுக்குப் பயன்படுத்தினால் குளிர்ச்சிதரும் ஆயில் ஆகும்.

மூட்டு வலிருந்து நிவாரணம் பெற "அலோசன் ஹெல்த் டிரிங்க்" உதவும். இது உலகின் அபூர்வ சாகாவரம் பெற்ற சோற்றுக் கற்றாழை மூலிகையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இதில் உள்ள ஊட்டச் சத்துகள் நிறைந்த தண்ணீர் உடலில் குறைவாக உள்ள நீர்ச் சத்தை அதிகப்படுத்தி மூட்டுகள் சரியாக இயங்குவதற்குத் தேவையான கூழ் போன்ற திரவத்தை உற்பத்தி செய்ய உதவுகிறது. மேலும் எலும்புகளுக்குத் தேவைப்படும் சுண்ணாம்புச் சத்தையும் (கால்ஷியம்) அலோசன் ஹெல்த் டிரிங்க் அளித்து மூட்டு வலியைப் போக்க உதவுகிறது.


காமாலை நோய்க்கும் சோற்றுக் கற்றாழை மருந்தாக பயன்படுகிறது. தவிர கூந்தல் தைலம், அழகு சாதனப் பொருள்களில் இது சேர்க்கப்படுவதால் பொருளின் தரமும், வீரியமும் மட்டுமல்ல மருத்துவதன்மையும் அதிகரிக்கிறது.

கண்நோய், கண் எரிச்சலுக்கு கற்றாழைச் சோற்றை கண்களின் மேல் வைக்கலாம். விளக்கெண்ணெயுடன் கற்றாழைச் சோறைக் காய்ச்சி காலை, மாலை என இரு வேளை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வர, உடல் அனல் மாறி மேனி பளபளப்பாகத் தோன்றும். நீண்ட கால மலச்சிக்கல் நீங்கும். கல்லீரல் ஆரோக்கியமாக விளங்கும். உள் மருந்தாக வயிற்றுப் புண் மற்றும் வயிறு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தும். மந்தம், வயிற்று வலி, பசியின்மை, குன்மக் கட்டி, ரணம், புளியேப்பம், பொருமல் ஆகியவை குணமாகும்.

முதுமை

# ஓய்வு பெற்றும் நிம்மதி இல்லை.
## - அரசு அதிகாரியின் அனுபவம்...

**அரசுப் பணியிலோ தனியார் அலுவலகத்திலோ ஓய்வுக்குப் பின்பு எல்லோரும் நிம்மதியாகத்தான் இருப்பார்கள். ஆனால் பணியின்போது பணிக்குரிய தர்மத்தின்படி, நியாயத்தின்படி பணியாற்றாவிட்டால் பின்னாளில் வாழ்க்கையில் நிம்மதியை தொலைத்து விடுவார்கள். அப்படி நிம்மதியைத் தொலைத்த ஒரு ஓய்வு பெற்ற அதிகாரியின் கதையை அவரே சொல்கிறார் கேளுங்கள்...**



என் பெயர் இராமசாமி.

ஒரு காலத்தில் சென்னை மற்றும் வேலூரில் என் பெயர் தெரியாத அரசு அதிகாரிகளே கிடையாது.

இன்று நான் முகவரி கூட இல்லாமல் வாழ்கிறேன்.

கோயம்பத்தூரில் ஒரு கிராமத்தில் ஒரு ஓட்டு வீட்டில் நானும் என் மனைவியும் அனாதைகளாக...

நான் என் வாழ்வில் உணர்ந்த விசயத்தை உங்களிடம் பரிமாற்றம் செய்கிறேன்.

நான் அரசுப் பணியில் பல துறையில் பணியாற்றி உள்ளேன். சம்பளத்தை விட கிம்பளம் (லஞ்சம்) நிறையவே பெற்று சந்தோஷமாக இருந்தேன்.

ஆண்டவன் நம்மை நல்லா வச்சிருக்கான் என்று சந்தோஷமாக கோவிலுக்கு சென்று பூஜை புனஸ்காரம் செய்து வந்தேன்.

எனக்கு ஒரே மகன். நல்லா எம்.பி.ஏ. வரை படிக்க வச்சேன்.

ஒரு கிரவுன்ட் இடம் வாங்கி கார் பார்கிங், வீடு, கார், தோட்டம் என நாங்கள் சந்தோஷமாக இருந்தோம்.

நானும் ஓய்வு பெற்றேன்.

என் மகனுக்கு திருமணம் செய்து வைத்து, சென்னையில் ரூ.40,00,000தில் பிளாட் வாங்கி குடியேறினேன்.

மருமகளும் கர்ப்பமாக இருந்தாள்.

7ம் மாதம் சீமந்தம் வைக்க ஏற்பாடு செஞ் சிக்கிட்டு இருந்தேன். ஒரு போன் வந்து என்னை தூக்கி போட்டது. போனில், அவர் சொன்ன விசயம்...

"உங்கள் மகன் பைக் விபத்தில் அரசு மருத்துவமனையில் உள்ளார் வந்து பாருங்க..." என்று.

விழுந்தடித்து சென்று பார்த்தேன்.

என் மகன் கோமா நிலைக்கு தள்ளப்பட்டார்.

என் மருமகளுக்கு ஆண் பிள்ளை பிறந்தது. ஆனால் என் மகன் இரண்டு மாதத்தில் உயிர் பிரிந்து விட்டான்.

என் மருமகள் அவர்கள் வீட்டுக்கு குழந்தையுடன் சென்று விட்டாள். பின்னர் அவளுக்கு *ஜீவனாம்சம்* மற்றும் பேரன் வாழ்க்கை செலவு என வழக்கு தொடர்ந்து எங்கள் சொத்துக்களை எல்லாம் வாங்கி கொண்டாள்.

இப்போது எனக்கு கிடைக்கும் பென்சனை வச்சுத்தான் காலம் போகுது. சாப்பாடு செலவுகள், வீட்டுக்கு வாடகை போக முட்டி வலி, சர்க்கரை போன்ற நோய்கள் பற்றிக்கொண்டதால் மருந்து செலவு வேறு...

அப்போது தான் யோசித்தேன், 'ஏன் நம் வாழ்க்கை இப்படி ஆனது என்று...'

என் மனம் சொன்னது, 'நீ வாங்கிய லஞ்சம் தான் உன் வாழ்வை சீர்ழித்தது...' என்று.

'சரி... லஞ்சம் வாங்காமல், என்னுடன் சம காலத்தில் பணிபுரிந்த என் நண்பர் ஒருவரை தொடர்பு கொண்டேன்.'

அவர் என் நிலை கண்டு மனம் சங்கடப்பட்டார்.

'சரிப்பா நீ எப்படி இருக்க..?' என கேட்டேன்.

அவர் சொன்னார், "நிம்மதியாக இருக்கேன்... உண்ண உணவு, உடுக்க உடை, பேரன் பேத்தி, ஓய்வு பணத்தில் சிறியதாக ஒரு வீடு, பையன், பொண்ணு தனியார் கம்பெனி வேலை...

நானும் என் மனைவியும் காசி ராமேஸ்வரம் போய் சிவனடியாரா இருக்கோம். தேவாரம் திருவாசகம் ஓதுதல், வாரா வாரம் சிவன் கோவில் உழவாரப் பணி என நிம்மதியா இருக்கேன்..." என்று சொன்னார்.





என்னை யாரோ செருப்பால் அடித்தது போல் உணர்ந்தேன்.

நானும் கோவிலுக்கு போனேன் விபூதி குங்குமம் வைத்தேன். அபிஷேகம் எல்லாம் செஞ்சேனே. எனக்கு மட்டும் ஏன் இப்படி...?

அப்போது தான் என் காதில் *அபிராமி அந்தாதி* எங்கோ பாடியது என் காதில் விழுந்தது.

*"தனம் தரும், கல்வி தரும்...*

*ஒரு நாளும் தளர் வறியா மனம் தரும்...*

*தெய்வ வடிவும் தரும்...*

*நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்*

*அன்பர் என்பருக்கே...*

*கனம் தரும் அபிராமி கடைகண்களே."*

உணர்ந்தேன் நாமும் கோவிலுக்கு போனது பத்துல ஒண்ணா போச்சே.

நல்லா இருக்கும் போது உண்மையை உணரவில்லையே.

உயிரற்ற பொருள் வாங்கி குவித்தேன்.

என் உயிர் உள்ளே உள்ள பொருளை இழந்தேன்.

இன்று...

வாழ்க்கையை இழந்து நிற்கிறேன்.

*அரசன் அன்று கொல்வான்...*

*தெய்வம் நின்று கொல்லும்...*

*மக்களுக்கு செய்யும் சேவையே...*

*மகேசனுக்கு செய்யும் சேவை... என்று கூறினார் அந்த அதிகாரி.

**அந்த அதிகாரியின் புலம்பல் இன்று பணிபுரியும் அதிகாரிகளுக்கு பணியின்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பாடம்.**

**- வி. மோகன்ராஜ்**

**சிந்திக்க...!**

உழைப்பு உடலை வலிமையாக்கும். துன்பங்களே மனதை வலிமையாக்கும்.



# பீனிக்ஸ் பறவை

## - ஒரு பார்வை



புராதன கதைகளின் படி கற்பனை பறவை ஆகிய இதன் தோற்றம் கடும் சிவப்பு நிற உடலையும் தங்க நிறத்திலான வால்ப்பகுதியையும் கொண்டு காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. மேலும் பீனிக்ஸ் பறவையின் நிறம் குறித்து ஒவ்வொரு புரானக்கதைகளிலும் ஒவ்வொரு விதமாக கூறப்பட்டுள்ளது. பீனிக்ஸ் பறவையானது 500 முதல் 1000 வருடங்கள் வரையிலான வாழ்க்கை சுழற்ச்சியை கொண்டதாக நம்பப்படுகிறது. இப் பறவையானது தனது ஆயுள் முடிவதாக உணரும் தருவாயில் தானாகவே தனக்கென்று ஓர் மரத்தின் சிறு கிளைகளைக் கொண்டு கூடு ஒன்றை அமைத்து அதில் தனக்கு தானே தீ வைத்துக்கொள்ளுமாம்.தீ வைத்துக் கொண்ட பீனிக்ஸ் பறவையும் அதன் கூடும் முற்றாக எரிந்து தீர்ந்ததும் அதில் எஞ்சிய சாம்பலில் இருந்து புதிய பீனிக்ஸ் பறவை அல்லது புதிய பீனிக்ஸ் பறவையின் முட்டை தோன்றுவதாக நம்பப்படுகிறது.

இவ்வாறாக மீண்டும் பிறக்கும் பீனிக்ஸ் பறவை சுயமாகவே தான் வாழும் காலத்தை நிர்ண யித்து புதிய ஒரு வாழ்க்கை சுழற்ச்சியில் வாழுமாம். மேலும் சில புராணக் கதைகளின் படி புதிய பீனிக்ஸ் பறவை தனக்கு உயிர் கொடுத்த பீனிக்ஸ் பறவையின் உடலின் சாம்பலை வாசனை உள்ள பொருட்களைக் கொண்டு முட்டை ஒன்றை அமைத்து அதில் சேமித்து எகிப்தில் உள்ள ஹெலியோபோலிஸ் என அழைக்கப்படும் சூரிய கடவுளுக்கு என அமைக்கப்பட்ட கோயிலில் பாதுகாத்து வைக்குமாம். இது இவ்வாறு இருக்க இறந்த பறவையின் சாம்பலை அது அதன் சரணாலயமாக கருதும் சூரியனில் புதைக்க தனது இருப்பிடத்தில் இருந்து சூரியனை நோக்கிச் செல்லுவதாகவும் நம்பப்படுகிறது பீனிக்ஸ் பறவை சாம்பல் ஆவதற்கும் சாம்பலில் இருந்து மீண்டும் உயிர் பெறுவதற்கு இன்னுமொரு வியப்பான காரணம் சொல்லப்படுகின்றது. பீனிக்ஸ் பறவை ஒரு இலட்சிய வாதிப் பறவை எனவும் இதற்கு சூரியனைத் தொட வேண்டும் என்பதே வாழ்க்கை இலட்சியம் எனவும், அது சூரியனை நோக்கி பறக்கும் போது குறிப்பிட்ட தூரம் வரை சென்ற பின் சூரியனின் அதீத வெப்பம் தாங்க முடியாமல் உடல் கருகி மண்ணில் விழுந்து மீண்டும் உயிர்த்து தொடர்ந்து தனது பயணத்தை தொடருமாம்.



**எஸ். ஜானகி**
STD IX-A
GOOD SHEPHERD M.H.S.SCHOOL
CHENNAI

பீனிக்ஸ் பறவை தானாகவே தன்னை வேறு துணை இன்றி உருவாக்கும். இவை பழங்களிலோ பூக்களின் தேனிலோ தங்கி வாழ்வதில்லை. மாறாக மரங்களில் இருந்து வழியும் பாலிலேயே தங்கி வாழ்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. எந்த பறவைக்கும் இல்லாத சக்தி பீனிக்ஸ் பறவைக்கு இருப்பதாக நம்பப்படுவதனாலும் இனிமையான ரசிக்கக்கூடிய இசையை ஒத்த ஒலியில் ஒலி எழுப்பும் வல்லமை உடையதனாலும் முடிவற்ற பறவை என்பதற்காகவும் குறிப்பாக அனைவராலும் அறியப்பட்ட பறவை பீனிக்ஸ் ஆகும்.

ஆப்பிரிக்காவில் பீனிக்ஸ் பறவை வாழ்ந்ததாகவும் அவை கற்பனை ஆனவை அல்ல எனவும் நம்பப்படுகிறது.

பீனிக்ஸ் பறவைகள் தமது முட்டைகளை நெருப்பில் இருந்து வரும் சாம்பலில் அல்லது காட்டுத் தீயின் பின் அவற்றின் சாம்பலில் இடும் இயல்பை கொண்டதாம்.இதனை கண்ட அன்றைய மக்கள் இப்பறவைகள் நெருப்பில் இருந்து பிறப்பதாக தவறாக புரிந்து கொண்டமையால் அவை பற்றி பல்வேறு கட்டுக் கதைகள் உருவாகியது எனவும் ஒரு கருத்து நிலவுகின்றது. எவ்வாறு இருப்பினும் இவை உயிர் வாழ்ந்தமைக்கான எவ்வித தடையங்களும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. எனினும் புரானக் கதைகளிலும் பண்டைய புகழ் பெற்ற ஓவியங்களிலும் இவை முக்கியமான இடத்தை பெற்றுள்ளன.






## சிரிக்க...

**நண்பர் 1 :** என்னது? ராத்திரி பூரா உங்க பையன் புக் முன்னாடி உட்கார்ந்தும் தேர்ச்சி பெறலையா?

**நண்பர் 2 :** அவன் உட்கார்ந்திருந்தது facebook முன்னாடியாம்.

## சிந்திக்க...!

**எந்தவிதக் கொள்கையும், நோக்கமும் இல்லாத வாழ்க்கை திசைகாட்டும் கருவி இல்லாத கப்பல் நடுக்கடலில் நிற்பதற்கு ஒப்பாகும்.**



By:
P. Reeta
IX -B
Good Shepherd Mat. Hr. Secondary School.



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | Q | E | L | V | H | D | S | N | C |
| K | C | H | G | O | O | I | J | E | X |
| E | V | R | U | D | D | N | A | W | V |
| F | B | S | U | E | I | n | T | S | E |
| W | E | G | W | H | n | R | S | S | Y |
| M | J | A | I | U | C | J | B | T | R |
| V | L | O | Z | m | T | I | A | A | K |
| K | S | t | O | P | S | I | G | n | m |
| N | L | R | P | J | n | J | m | D | E |

Hint
1. Sidewalk
2. Bridge
3. stop
4 Church
5. sign
6. house
7. News
8. stand

FIND THE HIDDEN WORDS

By- P. Sophia Merlin
IX -'C'
Good shepherd Mat. Hr. Secondary School.




**மேற்கண்ட கட்டத்தில் மறைந்துள்ள வார்த்தைகளை வட்டமிட்டு எங்களுக்கு அனுப்புங்கள்.**



# POWER OF LEARNING

"I've said this many times, and I'll say it again. Never stop learning."

Jill has not been satisfy with her grade in college even she put a lot of effort in her academic. She was always present at the classes, took a lot of notes in the classes, and never missed handing in any assignment. Later on, she figured out that there were certain dependable skills which have made the difference between disappointment and success for generations of each student. These skills are: time control, classroom note-taking, and textbook study.




Time control is the plan and organizing your time of what you have to do for today, this week, or this month. Time control has been classified into three steps: first, you should arrange a large monthly calendar, and mark circle all the important dates such as the days on which tests are scheduled, and when the assignment are due. You are also able to circle the day or time that you have to study. The next step is to have a chart that covers all the days of the week and fill in all the fixed hours in each day. Then, mark time blocks that you can realistically use to study. The final step is making a daily to-do-list in the night before.

Classroom note-taking is the most important thing which is able to make you get successful in college effectively. First, you should take note on the main ideas and facts of the course which has been mentioned by your instructor, because this information could possibly come up in the exam. Second, you should use abbreviations while taking notes will save a lot time while you try to write down plenty of information. The next step is always writing down the definitions and enumerations that the teacher writes down on the board because it the chances that it will come up later on the exam. Then, be sure that you write down the instructor's examples and the connections between ideas. These techniques will make you to understand and remember the concept of the ideas easily.

There are four common techniques which make the textbook to be easily to read...

What Gandhi is saying here is that you should learn as if the stuff you're learning will be crucial to you even hundreds of years from now, as if you were going to live forever.

As humans, we have few or no true instincts. Everything we do, we have learned to do, from walking to programming complex computer systems. Philosophers, educators, and many others have been talking about the nature of learning since the earliest days of recorded history, and probably even before that. These 16 quotes, from a wide variety of times, explore different aspects related to learning."

Once you already know how to do something, continuing to do it is simply pointless reptition. Keep learning by finding new things to do, or new ways to do the old things. If you cannot do something, try to do it and learn how!

We find ourselves in a funny situation these days: We say "yes" to all the annoying schedule stretching requests, but say "no" to all the things that will help us grow as individuals.

Growing up, many of us were taught that sharing is caring. We were expected to indulge requests because it showed we care.





We're (mostly) past the days of safety scissors and glue sticks, though—where we're going, we won't need those things. Right now, you or I may be confronting a point—an intersection of two distinct avenues of maturation—of whether we become or remain "yes" men or if, perhaps for the first time, we buck the trend of being pushovers and think about No. 1.

At its purist, basest form, learning to say "no" is about attaining goals. Even if a person is eternally pledged to help others, it's still a goal. While the Internet is brimming with advice about how to become a go-getter, become a goal-oriented person, or a success story, what these lists actually do—aside from normalizing words like "achievement" to the point that even blinking is considered a monumental occasion—is glaze over what happens between creating the list of goals and hopefully, just hopefully, checking off the box next to the final item.

Achievement necessitates a graceful marriage of assertiveness and fearlessness. It just so happens learning to say both yes and no at the right moment embodies these things.

At its very core, though, saying no is a refusal. Indeed, "no" has begun to possess a connotation attached to it that makes its very usage seem insulting. Why say "no" when you can just not call back, not RSVP, have sudden extraordinary circumstances appear as if by magic, or just say you never got the message?

Because we're adults, and adults are expected to take responsibility for ourselves. Besides, saying "no" puts everything to rest. We aren't forced to make excuses to back up the first one, we'll be stand-up guys and it cuts down on stress.

"Like everything in life, any time you take anything to an extreme—either you say "yes" to everything or "no" to everything—you're going to be in a position that's often untenable and often unhealthy," says Dr. Nancy Elder, an assistant professor at the University of Cincinnati's College of Medicine. Elder works in stress management and mental health, is a real doctor, and is infinitely wiser than WebMD.

We can get stressed out by nearly everything on the planet: money, women, money, personal problems, money, etc. The largest, however, may be the actual drive to become successful. A work hard and ye shall be rewarded kind of thing. It's tough to work hard when you have extraneous obligations getting in the way of your main goal, though.







பொதுமக்களுக்கு சிறப்பாக செயலாற்றுவதன் மூலம் தான் வகிக்கும் பதவிக்கும் அதனால் தமிழக அரசுக்கும் பெருமை தேடி தருகிற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை பெருமைப்படுத்தும் தொடர்...

- ஆசிரியர்

# ராம் மோகன் ராவ் ஐ.ஏ.எஸ்

**த**மிழகத்தில் தலைமைச் செயலாளராக உள்ள தலைமைச் செயலாளர் ராம மோகன ராவ் 15-9-1957 ஆம் ஆண்டு பிறந்தவர். ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர். பட்டப்படிப்பு முடித்து, 1982ம் ஆண்டு ஐஏஎஸ் ஆக தேர்வு பெற்றார். தொடர்ந்து உதவி கலெக்டர், கலெக்டராக இருந்தார். பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கமிஷனர், ஆசிரியர் தேர்வாணையத்தின் தலைவர், வீட்டு வசதித்துறை தலைவர், சுற்றுலாத்துறை செயலாளர், விவசாய உற்பத்தித் துறைச் செயலாளர் உள்ளிட்ட பதவிகளை வகித்துள்ளார். 16-5-2011ம் ஆண்டு முதலமைச்சரின் தனிச்செயலாளராக நியமிக்கப்பட்டு, தொடர்ந்து 5 ஆண்டுகள் அந்த பதவியில் வகித்து வந்தார். தற்போது தமிழகத்தின் தலைமை செயலாளராக உள்ளார்.



தமிழகத்தில் தலைமைச் செயலாளராக உள்ள திரு. ராம் மோகன் ராவ் தமிழக அரசின் பல முக்கிய துறைகளில் பணியாற்றியுள்ளார். கடந்த முறை முதல் அமைச்சர் ஜெயலலிதா ஆட்சி பொறுப்பேற்றவுடன், முதல்அமைச்சரின் செயலாளராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். 1985ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக தமிழ்நாட்டில் பணியில் சேர்ந்த பி.ராம மோகன ராவ், நீண்ட அனுபவமும், திறமையும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சரின் தனி செயலாளராக 2வது இடத்தில் இருந்த ராம மோகன ராவ் தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.


*முதல்வருக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவராக இருந்ததால் இவருக்கு தலைமை செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**அமைதி, வளம், வளர்ச்சி என்ற முதல்வரின் தாரக மந்திரத்தை செயல்படுத்தும் விதமாக தலைமை செயலாளர் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, பாதுகாப்பு, சட்டம்ஒழுங்கு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி நலத்திட்டங்கள் மக்களை சென்றடையும் விதத்தில் பணியாற்றும் திரு.ராம்மோகன் ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களை வாழ்த்துகிறோம். பாராட்டுகிறோம்.**

**ஜி. ராம்மோகன்**



# நம்பிக்கைதானே அழகு!




**ஒ**ரு முறை கலாம் ஐயா பெண்கள் பள்ளி விழா ஒன்றில் கலந்து கொண்டார்.. விழா முடிந்ததும் வழக்கம் போல மாணவிகளோடு ஒரு கலந்துரையாடல் நடக்கிறது.. அப்போது ஐஸ்வர்யா ராய் உலக அழகியாக தேர்வு செய்யப்பட்டிருந்த சமயம்.. "ஐஸ்வர்யா ராய் ஏன் உலக அழகியாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.?" இந்த கேள்வியை மாணவிகளிடையே வைக்கிறார்..

ஒரு மாணவி "அங்கு வந்திருந்தவர்களில் அவர்தான் அழகாக இருந்தார்" என்கிறாள்.. அவருக்கு பதிலில் திருப்தி இல்லை.. அடுத்த மாணவி "அங்கே கேட்கப்பட்ட கேள்விக்கு அறிவுப் பூர்வமாக சிறப்பான ஒரு பதிலை சொன்னார்"..

அதிலும் அவருக்கு சம்மதமில்லை.. இப்படியே போய்க் கொண்டு இருக்க, அரங்கமே புரிபடாத ஒரு அமைதியில் இருக்கிறது.. ஆசிரியர் உட்பட அத்தனை பேருக்கும் குழப்பமான குழப்பம்.. அந்த சிறுமி எழுகிறாள் "ஏனென்றால் அந்த அழகிப் போட்டியில் நான் கலந்து கொள்ளவில்லை, அதனால்தான்".. என்கிறாள்.. அரங்கமே சிரிப்பால் அதிர்கிறது.. ஆனால் அங்கே ஒரே ஒரு கைதட்டல் ஓசை மட்டும் தனியாக கேட்கிறது..

அது கலாம் அவர்கள்.." குட்..! இதுதான் உண்மையான பதில்.. அடுத்தவர்கள் யார் நம் அழகை நிர்ணயம் செய்வதற்கு.. அதற்கு முன் நம்மை நாமே அழகு என்று தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமல்லவா.?.. கனிவான அன்பும், தளறாத நம்பிக்கையும், உயர்வான எண்ணமும் கொண்ட நாம் எல்லாருமே அழகுதானே.. அந்த நம்பிக்கை தானே அழகு" என்கிறார்.. அரங்கில் கரவொலி அடங்க வெகுநேரமாகிறது......



**எஸ். ஜானகி**
STD IX-A
GOOD SHEPHERD M.H.S.SCHOOL
CHENNAI



# கபாலிகான் நியூஸ்

வழக்கத்திற்கு மாறாக காலை 10 மணிக்கு ஆபிசுக்கு ஆஜரானார் கபாலிகான்.

**என்ன சீக்கிரம் வந்துடீங்க சார்?**

எடிட்டர் ஊர்ல இருந்து வரதுக்குள்ள...மேட்டர் கொடுக்கணுமே..அதான் சீக்கிரம் வந்தேன்.

**இந்தாங்க தண்ணி குடிங்க...**

காய்ச்சிய தண்ணியா?

**ஏன் காய்ச்சினாதான் குடிப்பீங்களா?**

அண்ணே... தமிழகத்துல குறிப்பாக திருவள்ளூர் மாவட்டத்துல திருத்தணி, திருவாலங்காடு பகுதியில கழிவுநீர் கலந்த குடித்தண்ணிய குடிச்சுட்டு டெங்கு காய்ச்சல் வந்து 4 சிறுவர்கள் பலியாகி இருக்காங்க.

**அமைச்சர்தான் டெங்கு காய்ச்சலே இல்லனாரே...**

சட்டசபையில தானே சொன்னாரு... ஆனா பாதிக்கப்பட்ட காவேரி ராஜபுரம் கிராமத்துக்கு நேர்ல போயி பார்த்துட்டு “ஆமா டெங்கு காய்ச்சல் பாதிப்பு இருக்குன்னு” சொன்னாரே..

**சட்டசபையில இந்த விசயத்தை எதிர்க் கட்சி காரங்க புயல கிளப்பி யிருப்பாங்களே...**

எங்க? எதிர்க்கட்சிக்காரங்க எல்லாரும் வெளிய வந்துடாங்களே! தி.மு.க. காரங்க போட்டி சட்டசபை நடத்துனாங்க... துரைமுருகன் தான் சபாநாயகர்... ஒரு விஷயத்தை கவனிச்சீங்களா? அங்ககூட ஸ்டாலின் எதிர்க்கட்சி தலைவர் தான். முன்னால் அமைச்சர்கள் சபையில அமைச்சர்களா இருந்து பதில் சொன்னாங்க... போட்டி சட்டசபை நடத்துனதுக்காக...ஸ்டாலின் உட்பட 60 எம்.எல்.ஏ.க்கள் மேல கேஸ் போட்டிருக்காங்க...! எப்ப எந்த நேரத்துல அரசு கைது செய்யும்னு...! ஸ்டாலின் சொல்றார்.

**சரி...காங்கிரசும் கூடவா இதைக் கேட்கல?**

அட... காங்கிரசுக்கு தலைவரே கிடையாதுங்க.. கடந்த ஜூன் மாதம் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ராஜினாமா பண்ணி ரெண்டு மாசம் ஆகுது. இன்னும் தலைவரே நியமிக்கல... சட்டமன்றத்துல காங்கிரஸ் முஸ்லீம் லீக் தி.மு.க.வுக்கு சப்போர்ட் பண்ணி வெளிநடப்பு செஞ்சுட்டாங்க தி.மு.க.



தி.மு.க. நடத்திய போட்டி சட்டசபை



அமைச்சர் விஜய பாஸ்கர் ஆறுதல் கூறுகிறார்

நடத்திய கண்டன பொதுக்கூட்டத்தில் இவங்க கலந்துகிட்டு பேசினாங்க...

காவல்துறை மானிய கோரிக்கை மீது பேசின முதலமைச்சர் ஜெயலலிதா துணிவிருந்தால் “கருணாநிதியும் ஸ்டாலினும் சபைக்கு வந்து பேச வேண்டியது தானே”னு கேட்டாராமே.! இதுக்கு தி.மு.க. காரங்க சொல்ற பதில் “எங்கள் தலைவர் கலைஞருக்கு 94 வயசாகிறது. அவர் உட்கார வசதி செய்து கொடுத்தால் வந்து பேசுவாரு... ஸ்டாலினை சபைக்கு வரக்கூடாதுன்னு சொன்னதுக்கப்புறம், ஏன் வரலனு கேட்டா எப்படி?”





சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா பதிலுரை

சரி.. சரி.. இந்தாங்க பஸ் டிக்கெட்.. கம்வெயன்ஸ் கொடுங்க...

**ஏன் 50 ரூபா.. ஒன் டே பாஸ் எடுக்கலயா?**

அத ஏன் கேட்குறீங்க 50 ரூபா.. ஒன் டே பாஸ் வாங்கனும்னா ஆதார் அட்டை, ரேஷன் கார்டு, பேன் கார்டு, ஏதாவது ஓர் ஆதாரத்தை கேட்குறாங்க...

**இது ஏழைகளை ரொம்ப பாதிக்குமே...**

அதிகாரிகள் லெவல்ல இந்த உத்தரவுங்குறதால, முதலமைச்சருக்கு தெரியாதுனு மக்கள் நம்புறாங்க.. முதலமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுப்பாரனும் மக்கள் நினைக்கறாங்க.

**நீங்க சொல்லிட்டீங்கள்ள அப்ப நடந்திடும்.**

**வெயில் கொடுமை தாங்கலப்பா...**

மழையும் பெய்ல.. வெயிலும் அதிகம். இதனால தமிழகத்துல 12 மாவட்டங்கள கடும் வறட்சி ஏற்படும்னு மத்திய நீர்வள ஆணையம் எச்சரிக்கை கொடுத்திருக்காங்க... தமிழக அரசு போர்கால நடவடிக்கை எடுக்க முடிவு பண்ணிருக்காங்க...



வறட்சி அபாயம்

**இனி ஸ்பீடு நியூஸ்...**

கட்டதுரைக்கு கட்டம் சரியிலனு வடிவேலு சொல்ற மாதிரி கோயம்புத்தூர் மேயர் ராஜ் குமாருக்கு நேரம் சரியில போல... அவரு மீது ஏகப்பட்ட புகார்கள் கார்டனுக்கு குவிகிறதாம்.

தூத்துக்குடி தி.மு.க.வில் புதிதாக சேர்ந்த ஜோயல் என்பவருக்கு தி.மு.க. தலைமை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ஸ்டாலினை மையப்படுத்தியும், மாவட்ட செயலாளரை மட்டம் தட்டியும் நடத்திய நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் கேட்டுள்ளது தலைமை... ஜோயல் சமீபத்தில் ம.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு ஆளா நின்னு சட்டசபைல ஆளுங்கட்சியான அ.தி.மு.க. அந்தகாலத்துல எதிர்த்தவரு பரிதி இளம்வழுதி..ஆனா இன்னிக்கு எங்க கட்சில 89 பேர் இருந்தும் சுகமில்லையே...என்று புலம்புகிறார் ஒரு தி.மு.க. தொண்டர்.

காங்கிரஸில் மீண்டும் சேர ஜி.கே.வாசன் முயற்சித்ததாகவும், அதற்கு இளங்கோவன் முட்டுக்கட்டை போட்டதாகவும் சொல்லப் படுகிறது.

போயஸ் கார்டனில் இரண்டு பெண்மணிகள் பரபரப்பு ஏற்படுத்தியதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. ஒருவர் முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா... கார்டனில் பாதுகாப்பு இருந்த அதிகாரிகளுடன அவர் தகராறு செய்துள்ளார் என்றும், மற்றொருவர் முதலமைச்சர் அண்ணன் மகள் தீபா... ஜெயலலிதாவை பார்க்க வேண்டுமென்று தகராறு செய்ததாகவும் செய்தி வந்துள்ளது.

உச்சநீதிமன்றத்தில் அவதூறு வழக்குல முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்ன பேசினாலும் அவதூறு வழக்கு போடுவதா? பொது வாழ்வில் விமர்சனங்களை சகித்துக் கொள்ள வேண்டாமா? என அடுக்கடுக்காக கேள்வி எழுப்பப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. மீது 85-ம் தே.மு.தி.க. மீது 48-ம் ஊடகங்கள் மீது 55-ம், காங்கிரஸ் மீது 7-ம், பா.ம.க. மீது 9-ம் ஆக 213 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

# கட்டுமானத்தொழிலில் நவீன தொழில்நுட்பம்

**தொழிநுட்பம் அல்லது தொழில் நுட்பம்** *என்பது, பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி செய்ய பயன்படும் அறிவியல் நுட்பங்களின் தொகுப்பு. தொழிநுட்பம் கருவிகள், கைவினைகள் முதலியவற்றின் பயன்பாட்டுடனும், அவை எவ்வாறு அவற்றைப் பயன்படுத்துவோர் தமது சூழலைக் கட்டுப்படுத்தவும், அதனோடு இயைந்து வாழவும் கூடிய தகுதியில், தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதுடனும் தொடர்புள்ள ஒரு பரந்த கருத்துரு ஆகும்.*

நவீன கட்டிடக்கலை என்பது முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகளில் பல மேற்கு நாடுகளில் எழுந்த ஒரு கட்டிடக்கலைப் பாணியைக் குறிக்கும். சில சமயங்களில் இது அனைத்துலகப் பாணி எனவும் குறிப்பிடப்படுவது உண்டு. நவீனம் என்னும் சொல், நடந்து கொண்டிருக்கும் காலத்தைச் சேர்ந்தவற்றைக் கடந்த காலத்தவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே பொது வழக்கில் பயன்படுத்தப்படுகின்றது. கட்டிடக்கலையிலும், 17 ஆம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சிக் கட்டிடக்கலையை அதற்கு முந்திய பாணிகளுடன் ஒப்பிட்டு நவீன கட்டிடக்கலை என்றனர். எனினும், இன்று நவீன கட்டிடக்கலை என்னும் போது அது 20 ஆம் நூற்றாண்டில் உருவாகி வளர்ந்த தனித்துவமானதொரு கட்டிடக்கலைப் பாணியைக் குறிக்கவே பயன்படுகின்றது. இது பொதுவாக 20 ஆம் நூற்றாண்டுக்கு உரியதாகக் கொள்ளப்படினும், நவீன கட்டிடக்கலைக்கான வித்து இந் நூற்றாண்டு தொடங்குவதற்குப் பல பத்தாண்டுகளுக்கு முன்னரே காணப்படுவதாக இன்றைய ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். எனினும், இதன் தொடக்கம் எதுவென்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையே உள்ளது.

நவீன கட்டிடக்கலை, பயன்பாடு சார்ந்த வடிவமைப்பு, கட்டிடப்பொருட்களின் அறிவார்ந்த பயன்பாடு போன்ற கொள்கைகளின் அடிப்படையில் உருவானது. இது வரலாற்றுப் பாணிகளைப் பின்பற்றுவதையும், அழகூட்டல் அணிகளைப் பயன் படுத்துவதையும் கைவிட்டு, கட்டிடப் பொருட்களினதும், கட்டிட வடிவங்களினதும் உள்ளார்ந்த அழகியல் தன்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு முக்கியத்துவம் கொடுத்தது. இதனால் நவீன கட்டிடக்கலை, கட்டிடங்களுக்கு எளிமையான வடிவத்தைக் கொடுத்தது.

**தொடக்கமும் வளர்ச்சியும்**

சில வரலாற்றாளர்கள், நவீன கட்டிடக் கலையின் வளர்ச்சியை ஒரு சமூகவியல் நிகழ்வாகக் கருது கின்றனர். அவர்கள் இதனை நவீனத்துவ இயக்கங்களோடும், அறிவொளி இயக்கங்களோடும் தொடர்பு படுத்துகிறார்கள். அவர்களுடைய கருத்துப்படி நவீன பாணி சமூக, அரசியல் புரட்சிகளினால் உருவானது. வேறு சிலர் இது முக்கியமாக தொழில்நுட்ப, பொறியியல் காரணிகளினாலேயே உந்தப்பட்டதாகக் கருதுகின்றனர்.

இரும்பாலும் கண்ணாடியாலும் கட்டப்பட்ட கிறிஸ்ட்டல் மாளிகையின் முகப்பு தொழிற் புரட்சியைத் தொடர்ந்து புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகள் கட்டிடக்கலை தொடர்பில் புதிய வாய்ப்புக்களை உருவாக்கும் சாத்தியங்கள் இருந்தன. இதனால், 19 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்தே இவ் வளர்ச்சிகளைக் கோட்பாட்டு அடிப்படையிலும், நடைமுறையிலும் கட்டிடக்கலையில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கண்ணாடி, இரும்பு, கான்கிரீட் போன்ற பொருட்களின் உற்பத்தி தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றங்கள் அவற்றைக் கட்டிடக்கலையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கின. 1851 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ஜோசேப் பாக்ஸ்ட்டனின் கிறிஸ்டல் மாளிகை கண்ணாடி, இரும்பு ஆகியவற்றைப் பயன்படுத்திய தொடக்க கால எடுத்துக்காட்டு ஆகும். 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில், இரும்பை, அமைப்புச் சட்டகங்களாகப் பயன்படுத்திப் பல கட்டிடங்கள் உருவாயின. 1883-1885 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கட்டப்பட்ட வில்லியம் லே பாரன் ஜென்னி என்னும் கட்டிடக்கலைஞரின் ஹோம் இன்சூரன்ஸ் கட்டிடம் இரும்பினால் கட்டப்பட்ட ஒரு கட்டிடமாகும். 1889 ஆம் ஆண்டில் பாரிசில் கட்டப்பட்ட ஈபெல் கோபுரமும் இரும்பைக் கட்டிடங்களில் பயன்படுத்துவதில் ஏற்பட்ட ஒரு திருப்புமுனையாக விளங்கியது.

நவீன கட்டிடக்கலையின் முக்கிய அம்சங்களில் ஒன்று பயன்பாட்டியக் கொள்கை (functionalism) ஆகும். லூயிஸ் ஹென்றி சலிவன் என்னும் கட்டிடக்கலைஞர் பயன்பாட்டியக் கொள்கையைக் கட்டிடக்கலையில் அறிமுகப்படுத்தினார்.







# விநாயகர் சதுர்த்தி கோலாகலம்

## சென்னை மாநகர காவல்துறை சிறப்பான ஏற்பாடு



இம்மாதம் 5-ந் திங்கட்கிழமை விநாயகர் சதுர்த்தி தினமாகும். அன்று தமிழகம் முழுவதும் மட்டுமல்ல இந்தியா முழுமைக்கும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதற்காக சிறப்பாகவும், பிரமிக்கத்தக்க வகையில் விநாயகர் சிலைகள் தயாராகி வருகின்றன. விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தின்போது அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமலிருக்க போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாக சென்னை மாநகர கமிஷனர் டி.கே. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் விநாயகர் சதுர்த்திக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் வியாபாரிகள் சிறப்பான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.



# எம் பதில்கள்




**தமிழக சட்டசபையில் என்ன நடக்கிறது?**

ஆளுங்கட்சி தனது அசுர பலத்தை காட்டி தி.மு.க.வை வெளியேற்றியது. தி.மு.க. வெளியே வந்து போட்டி சட்டசபை நடத்தியது. என்ன நடக்குதுனு மக்களுக்கு தெரியும்னா... நேரடியா ஒளிபரப்பினால்தான்.

**காய்கறி விலை குறைஞ்சு போச்சே...**

அதுல உங்களுக்கு என்ன குறைச்சல்? ஏழைகள் உபயோகப்படுத்துறது காய்கறியைதான். விளைச்சல் அதிகமானதால், சந்தைக்கு வரத்து அதிகமானது. எனவே. விவசாயிகள் செழிப்பாக இருந்தால் விளைச்சல் கூடும் என்பதை அரசாங்கள் கவனத்தில் கொண்டு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்.



**எழுத்தாளர் "சாவி" பற்றி ....**

மாலன், பாலக்குமாரன், சுஜாதா போன்ற எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கிய சிற்பி "சாவி". சாம்பு அய்யரின் மகனான விஸ்வநாதன் தன்னுடைய தந்தையின் பெயரின் முதலெழுத்தையும், தன்னுடைய பெயரின் முதலெழுத்தையும் சேர்த்து "சாவி" என்று வைத்துக் கொண்டார். சாவி அவர்கள் தினமணிக் கதிர், குங்குமம் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றி உள்ளார். நகைச்சுவை பயணக்கட்டுரை எழுதுவதில் வல்லவர். சாவி, சுஜாதா, பூவாளி, மோனா என பல்வேறு மாத இதழ்களை வெற்றிகரமாக நடத்தினார்.



**முரசொலி நாளிதழ் பவள விழாவைத் தொடுகிறதே.**

தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் 10.8.1942-ல் மாணவனாக இருந்தாபோது கையோடாக தொடங்கி பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு வெற்றிகரமான நாளேடாக 75-வது ஆண்டை நோக்கி பயணிக்கிறதென்றால், அதற்கு முழுக்க முழுக்க காரணம் கருணாநிதியின் விடாமுயற்சியே...! அவரின் அரசியல் போர்க்களத்திற்கு பயன்படும் ஆயுதம் முரசொலி.

**ந. முத்துக்குமார் மறைந்துவிட்டாரே...!**

போன மாதம் திரையுலகில் இறப்புகள் ஏராளம். தயாரிப்பாளர் பஞ்சு அருணாச்சலம், ஜோதிலட்சுமி, நா.முத்துக்குமார் ஆகியோரின் இறப்பு நம்மை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது. இதில் முதல் இருவர் வாழ்ந்து சாதித்து தங்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்தவர்கள். ஆனால் ந. முத்துக்குமார் அதிகப் பாடல்களை எழுதி குறைந்த நாளில் வாழ்நாளை முடித்துக் கொண்டார். 9 மாத குழந்தை தன்னுடைய தந்தையை இழந்தது மிகப்பெரிய சோகம்.

பிறரை சந்தோஷப்படுத்தும் பாடல்களை இயற்றும் கவிஞர்கள். தங்கள் வாழ்க்கையில் சோகத்துக்கு இடம் தருவது என்பது வேதனைக்குரியதாகும். பாரதியார் பாடிய நல்லதோர் வீணை செய்தே...அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ... என்ற பாடல் நினைவுக்கு வருகிறது.

### கவலையின்றி வாழ்வோம்!



கவலைப்படும்போது நமது மனம் மிகவும் பாதிப்படைகிறது. இதனால் நமது வழக்கமான செயல்கள் பாதிக்கப்படுகின்றன. முக்கியமாக தூக்கம் கெடுகிறது. துக்கம் நம் மனதைச் சூழ்ந்து கொள்ளுகிறது. மன உளைச்சல் காரணமாக வியாதிகள் நம்மை சுலபமாக நெருங்குகின்றன.

கவலைப்பட்டு ஏதாவது ஆகப்போகிறதா? நிச்சயம் இல்லை. ஒன்று கவலையைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள் அல்லது உங்களை விட அதிக பிரச்சினை உடைய ஒருவரைப் பார்த்து உங்கள் கவலை எவ்வளவோ மேல் என்று உங்களுக்கு நீங்களே சமாதானம் சொல்லிக் கொள்ள பழகுங்கள். கவலையை எதிர்கொள்ளும் பக்குவம் உங்களுக்கு வந்துவிடும்.



பத்திரிக்கை உலகில்
பணியாற்றுபவரா?
பணியாற்ற விரும்புபவரா?
வாங்க... நம்
மித்ரா டைம்ஸ் குழுமத்தில்
நீங்களும் பயணிக்கலாம்...
பத்திரிக்கையாளர்களுக்கு
தேவையான அனைத்து
வசதிகளையும் அரசிடமிருந்து
பெற்றுத்தர
உங்களோடு நாங்களும்,
எங்களோடு நீங்களும்
நம்மோடு நாமாக
இணைந்து பணியாற்றுவோம்

தொடர்புக்கு
மித்ரா தமிழ் பத்திரிகையாளர்கள் சங்கம்
www.mitratimes.com
E-Mail : mitratimes2015@gmail.com
Whatsapp No. 9841843773

# நாம் இருவர் திரைப்படத்தில் பாரதியார் பாடல்கள்

- தயாரிப்பாளர் ஏ.வி.எம். சரவணன் தரும் அரிய தகவல்கள்.

'நாம் இருவர்' படத்தின் தொடக்கமே, 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற பாரதியின் பாடல்தான். அந்த பாடலில்தான் முரசு நடனத்தை புகுத்தியிருந்தார் அப்பச்சி. முரசின் மீது நின்றபடி குமாரி கமலா நடனம் ஆடினார்.

நாம் இருவர் கதையைக் காட்டிலும், அந்த கதைக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்த பாரதியாரின் பாடல்கள் மீது அப்பச்சிக்கு தீராத ஆர்வம் இருந்தது. அந்த பாடல்களை படத்தில் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணினார். அதற்கானஉரிமை யாரிடம் இருக்கிறது? என்று யோசித்தார். மெஸ்ஸர்ஸ் சுராஜ்மல் அண்ட் சன்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர்கள், கிராமபோன் ரெக்கார்டு கம்பெனி ஒன்றை சென்னை ராட்டன் பஜாரில் வைத்திருந்தனர். அவர்களிடம் தான் பாரதியார் பாடல்களின் உரிமை இருந்தது. ஒலிப்பதிவு செய்யலாம். என்பதற்காக ரூ.600 ரூபாய்க்கு பாரதியாரின் பாடல்களின் காப்பிரைட் வாங்கி வைத்திருந்தனர். பின்னாளில் கிராமபோன் ரெக்கார்டு கடையை மூடிவிட்டாலும், பாடல்களின் உரிமை அவர்களிடமே இருந்தது.






இதையடுத்து அதன் முதலாளியை நேரில் சந்திக்க அப்பச்சி ஏற்பாடு செய்தார். அவரும் வரச் சொல்லி விட்டார். 2 ஆயிரம் அல்லது 3 ஆயிரம் ரூபாய்க்கு பாடல்களை வாங்கிவிடலாம் என்று எண்ணிய அப்பச்சி, எதற்கும் இருக்கட்டும் என்று ரூ.10 ஆயிரத்தை எடுத்துச் சென்றிருந்தார். அப்பச்சி தன்னுடைய வியாபார தந்திரங்களையெல்லாம் பிரத்யோகப்படுத்தியும். அந்த முதலாளி மசிவதாக தெரியவில்லை.

'எனக்கு உபயோகம் இருக்கிறதா, இல்லையா என்பது முக்கியமில்லை. நான் கொடுத்து வாங்கிய தொகையும் அவசியமில்லை. எனக்கு ரூ.10 ஆயிரம் தருவதாக இருந்தால், பாரதியார் பாடல்களின் உரிமையயை தருகிறேன்' என்றிருக்கிறார். கறாராக, இன்னும் கொஞ்சம் தாமதித்தாலும் விலையை ஏற்றிவிடுவார் என்று எண்ணிய அப்பச்சி, உடனடியாக அக்ரிமெண்ட் எழுதச்சொல்லி பாரதியார் பாடல்களுக்கான உரிமையை தன் பெயரில் மாற்றிக் கொண்டார்.

பின்னாளில் தமிழக முதல்அமைச்சராக இருந்த ஓமந்தூர் ரெட்டியார் கேட்டுக் கொண்டபோது, மறுப்பேதும் சொல்லாமல் பாரதியாரின் பாடல்களுக்காக தான் வாங்கி வைத்திருந்த உரிமையை அப்படியே நாட்டுடைமையாக்கினார் அப்பச்சி. அந்த உரிமைக்காக அவர் தந்திருந்த விலையை தர அரசு முன்வந்தபோது, 'வேண்டாம்' என்று மறுத்துவிட்டார்.

Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.



மித்ரா டைம்ஸ் சுஜாதா மூர்த்தி குத்துவிளக்கு ஏற்றுகிறார்




விழாவின் சிறப்பு விருந்தினர்களான முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி, மித்ரா குழும நிறுவன தலைவர் எம்.எஸ். மூர்த்தி, விமலா பைன் ஆர்ட்ஸ் ஆர். சேகர் ஆகியோர் கௌரவிக்கப்படுகிறார்கள்.




இசைக் கச்சேரியினர்



விழாவில் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசினை தொழிலதிபர் லீமாரோஸ் மார்ட்டின் வழங்கினார். உடன் மித்ரா டைம்ஸ் எம்.எஸ். மூர்த்தி, சுஜாதா மூர்த்தி, விமலா பைன் ஆர்ட்ஸ் விமலா, ஆர். சேகர் ஆகியோர் உள்ளனர்.



தொழிலதிபர் ஏ.கே. அந்தோணி அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்.



அரங்கத்தின் ஒரு பகுதியினர்....



விழாவில் பங்கேற்ற சுருதிலட்சுமி, ஜானகி

## இடைவிடாத இன்னிசை மழை

சென்னை அயனாவரம் விமலா பைன் ஆர்ட்ஸ் புன்னகை அரசர் ஆர்.சேகர், பி.கவிராஜ் ஆகியோரின் ஏற்பாட்டில் டாக்டர் சி.என்.எஸ் வழங்கிய மலரும் நினைவுகள் இடைவிடாத இன்னிசை தேன்மழை சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் 15.08.2016 அன்று நடைபெற்றது.




FEEL SECURE UNDER OUR SECURITY SERVICES

# MITRA SECURITY SERVICES (P) LTD

**Now a days ...**

**It must be very more important Safety & Security.**

**Whether it was...**

- **FACTORY**
- **OFFICE**
- **FLAT & BUILDINGS**

**We are provide 'SECURITY'**

**Our security firm insist**

- **Safety**
- **Security**
- **Reliablity**
- **Responsibility**
- **Reasonablity**




MITRA SECURITY SERVICES(P)LTD

001, Ground Floor, Inchakkal Block, Chitra Avenue,
9 Choolaimedu High Road, Chennai - 94

: mitrasecurityservices@india.com   : 044-23743662/7 cell : 7358446944